காரைக்குடி க. முத்துப்பட்டணம் நகரத்தார்


அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில்

திருக்குட நன்னீராட்டு விழா



சிறப்பு மலர்

பிரமோ தூத வருடம் - 1991



சிவமயம்

காரைக்குடி க. முத்துப்பட்டணம் நகரத்தார்

[illegible]ன் கோ[illegible]



உ

சிவமயம்

ஸ்ரீ ... சுந்தரேஸ்வரர் துணை

அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில்

ஓ. முத்துப்பட்டணம் காரைக்குடி.

குடமுழுக்கு : 25-3-1991

மண்டலாபிஷேகம் : 11-5-1991

காரைக்குடி ஓ. முத்துப்பட்டணம் நகரத்தார் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழாக்குழு

தலைவர் : திரு அரு மு மு அருணாசலம் செட்டியார்

உபதலைவர் : திரு சித. சிதம்பரம்

செயலாளர்கள் : திரு கதி ராம. மசாம. அண்ணாமலை செட்டியார்

திரு சேவு மெய்யப்பச்செட்டியார்

பொருளாளர் : திரு அரு. ம. ... ராம ராமசாமி செட்டியார்

உறுப்பினர்கள் : திரு ... சு. முருகப்ப செட்டியார்

திரு பெரி. நா நா. அ. தேவ. நாராயணன் செட்டியார்

திரு ... அள. வீரப்ப செட்டியார்

திரு வ ராம ராமசாமி செட்டியார்

திரு சா ... செட்டியார்

கண. வினைதீர்த்தான் செட்டியார்

மலர்க்குழுவினர் :

தலைவர் : திரு சித சிதம்பரம்

செயலர் : திரு அ. சே. கி சேக்கப்ப செட்டியார்

பொருளாளர் : திரு அரு மு மு. சி ராம. ராமசாமி செட்டியார்

உறுப்பினர்கள் : திரு அழ. ராம அழ சுப்பிரமணியன் செட்டியார்

திரு ப. மு. சித பழநியப்ப செட்டியார்


திரு அரு. மெ. மெ. மெ. இராமநாதன் செட்டியார்

திரு ராம. மு. அ. கணேசன் செட்டியார்


பதிப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர் "காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன் M A B T

குடமுழுக்கு நடந்த
அம்மன் கோபுரம்



திருக்குட நன்னீராட்டு



M. Meyya

உ

பதிப்புரை

அருள்மிகு மீனாட்சி அம்மன் துதி

செழியர்பிரான் திருமகளாய்க் கலைபயின்று
முடிபுனைந்து செங்கோல் ஓச்சி
முழுதுலகும் சயங்கொண்டு, திறைகொண்டு
நந்திகண முனைப்போர் சாய்த்து
தொழுகணவற்கு அணிமணமா லிகைசூட்டித்
தன்மகுடம் சூட்டி செல்வம்
தழைவுறுதன் அரசளித்த பெண்ணரசி
அடிக்கமலம் தலைமேல் வைப்பாம்.

—பரஞ்சோதிமுனிவர்

கி. பி. 1870ஆம் ஆண்டுவாகில் கழனிவாசல் முத்துப்பட்டணம் நகர் உருவாயிற்று. அப்பொழுது அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் எழுப்பப் பெற்றுக் குட முழுக்கு நிகழ்ந்தது. இப்பொழுது நடைபெற்றது நான்காவது குட முழுக்கு விழா ஆகும். கோயில் மிகச் சிறந்த முறையில் புதுப்பிக்கப்பெற்றுத் தெய்வ சாந்நித்தியத்தோடு திகழ்கிறது பலலட்சம்ரூபாய்செலவில் முத்துப்பட்டணம் நகரத்தார்கள் மிகுந்த பக்தி சிரத்தையோடு இக்குடமுழுக்கு விழாவினைக் கொண்டாடி இருப்பது பாராட்டத்தக்கதாகும். இதன் நினைவாகச் சீரிய முறையில் ஒரு மலரும் வெளி வருவது நல்ல முயற்சியாகும். இம்மலருக்கு அடியேனைப் பதிப்பாசிரியர் ஆக நகரத்தார்கள் நியமித்தார்கள் அதுவும் இறையருளே.

"செல்வமெலாம் பொலிகாரை நகர்முத்துப்
பட்டணத்து நகரத் தார்கள்
கல்வியுடன் தொழிலோடு புகழ்செல்வம்
வாரிசுகள் கனிந்து வெல்ல
நல்லமுறை காக்கின்ற நாயகியே
மீனுட்சி நயனத் தாலே
அல்லலெலாம் தீர்த்தென்றும் ஆதரித்துத்
காத்துநலம் அருள்வாய் அம்மா!"

என்று அருள்மிகு மீனுட்சி அம்மனின் திருவருளை வழுத்தி, என்னை இப்பணியில் ஈடுபடுத்திய முத்துப்பட்டணம் நகரத்தார்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம் மலருக்கு ஞானதானம் செய்தவர்களுக்கும், விளம்பரங்கள் தந்து பொருள்தானம் செய்தவர்களுக்கும், சிரமதானம் செய்தவர்களுக்கும், அழகுற அச்சிட்டுத் தந்த காரைக்குடி அரசு அச்சகத்தினர்க்கும் என அன்பான நன்றி உரியது.

இந்த அருட்பணியில் என்னை ஈடுபடுத்திய அருட்கடலாம் அன்னை மீனுட்சியின் திருவடிகட்கும், முத்துப்பட்டணம் நகரத்தார்களின் பொற்பாதங்களுக்கும் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்.

அரு. சோமசுந்தரன்
பதிப்பாசிரியர்

திருக்குட நீராட்டு விழா அமைப்புக்குழு

சுவாமிகள் சுத்தம் செய்து, கோவில் சுத்தம் செய்து, மருந்து சாத்துதல்
ப. மு. சித. பழனியப்ப செட்டியார்
தேவ. அண. சம்பந்தம்
கொ. நா. சு ச. வீரமணி

யாகசாலை : மெ சு தி சுப. கண்ணன் செட்டியார்
கண மெ. நடராஜன் செட்டியார்
முரு நா. மெய்யப்ப செட்டியார்
லெ அ நா. அண்ணாமலை
சொ நா சி. நாராயணன்

மஹா அபிஷேகம் : அரு மு மு. சுப்பிரமணியன் செட்டியார்
கரு வ அழ. வீரப்ப செட்டியார்
வ ராம ராஜேந்திரன் செட்டியார்
நா. மீனாட்சிசுந்தரம்
Dr. N. சுப்பிரமணியன்

சுவாமி புறப்பாடு : அழ. சுப்பிரமணியன் செட்டியார்
நா வீர நாராயணன் செட்டியார்
மெ நா மெ மெ. மெய்யப்ப செட்டியார்
அரு மு மு ராம. சுப்பிரமணியன்
அரு மு மு சி ராம. லெட்சுமணன்
அரு. மீனாட்சிசுந்தரம்

தேவாரம், வேதபாராயணம், மேளம் :
தேவ. நாராயணன் செட்டிமார்
சா. மீனாட்சிசுந்தரம்
ராமு

வரவேற்பு :- அரு. மு மு அருணாசலம் செட்டியார்
சா சு முருகப்ப செட்டியார்
வ ராம ராமசாமி
ராம. சிதம்பரம்

பின்விளக்கு/காஸ்லைட் : கி. வீ. முருகப்ப செட்டியார்
சே. லெட்சுமணன்

பாதுகாப்பு, விளம்பரம் : சித. சிதம்பரம்
கி. சேக்கப்ப செட்டியார்
ராம. முருகப்ப செட்டியார்
அரு மெ மெ மெ. ராமநாதன்

சாப்பாடு, பிராமண போஜனம் : லெ வீர லெ. வீரப்பன்
மெ சு தி த. உத்திராபதி
ருதி. வீரப்பன்
சக்திவாகீசன்
வெ நா. நாச்சியப்ப செட்டியார்

அழைப்பு அனுப்புதல் : அரு மு மு ராம. லெட்சுமணன்
அரு மு மு அரு கா. அருணாசலம்

நிகழ்ச்சி நிரல் : அரு. சோமசுந்தரன்
Er. S. சுப்பிரமணியன்

பொக்கிஷதார் : அரு மு மு ராம அருணாசலம்

போட்டோ/வீடியோ : பழ. மாணிக்கம் செட்டியார்

திருக்குட நீராட்டு விழாவிற்கு எல்லாவற்றானும்
ஒத்துழைப்பு நல்கிய

திரு மெ செ ச மு மெ. முத்துராமன் செட்டியார்

திரு சுப சித. சுப்பிரமணியன் செட்டியார்

திரு க அ ப அ. பழனியப்ப செட்டியார்

ஆகியோருக்கு முத்துப்பட்டணம் நகரத்தார் சார்பாக
நன்றி உரித்தாகுக

உ

Phone: 2315

ஸ்ரீ சந்த்ர மௌளீஸ்வராய நம :

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத

பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மடம் : : ஸமஸ்தானம்

காஞ்சிபுரம் - 631 502

தேதி: 19—12—90

கோவில்களை ஸம்ரக்ஷிப்பதில் தீவிர நாட்டம்கொண்ட பரம்பரை நகரத்தார் பரம்பரை. இவர்களுக்குச் சொந்தமான காரைக்குடி முத்துப்பட்டணம் அருள்மிகு மீனாக்ஷியம்மன் கோவிலுக்கு ஜீரணோத்தாரணப்பணி முடித்து கும்பாபிஷேகம் செய்வித்து மலரும் வெளியிடவிருப்பது அறிந்து ஸந்தோஷிக்கிறோம். ஆலயம் காத்திடும் அரும்பணியின் பெருமைகளை விளக்கும் நன்மலராக மலர் திகழ ஸ்ரீ மீனாக்ஷியம்மன் அருள்நோக்கு கிட்ட ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

உ
சிவ சிவ
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே,

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி 27
நாள்: 12—1—91

அன்பிற் சிறந்த நமது பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம் அவர்களுக்கு, எல்லா நன்மைகளும் பெருக, திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

நமது காரைக்குடி முத்துப்பட்டணத்தில் எழுந்தருளி யிருக்கும் அருள்தரு அன்னை மீனாட்சி அம்மன் திருக்கோயில் திருப்பணி செய்யப்பெற்றும் பெருஞ்சாந்தி விழா — குடமுழுக்கு விழா நடைபெறவிருக்கும் செய்தி மனமகிழ்ச்சியைத் தருகிறது. பெருஞ்சாந்தி விழா எடுக்கத் துணைநின்றோர் அனைவருக்கும் நமது பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

இன்ப அன்பு

அடிகளார்

உ
சிவமயம்

கிருபானந்த வாரியார் சுவாமிகள் சென்னை

வாழ்த்து

நேரிசை வெண்பா

கோலமிகு காரைக் குடிமுத்துப் பட்டணத்தில்
சீலமுடன் வாழ்ந்துநலம் செய்கின்ற — நீலநிற
மீனாட்சி பாதமதை மேவித் துதிசெய்வோர்
தானாட்சி செய்வார் மகிழ்ந்து.

அன்புள்ள,

கிருபானந்த வாரி

உ

HIS HOLINESS

Sri-la-Sri Arunagirinatha Sri Gnanasambanda Desika Paramachariya Swamigal

292nd Gurumaha Sannidhanam & Aadheena Karthar

Madurai Aadheenam

70, South Avani Moola Street,
MADURAI-625 001 (S. India)
18—12—1990

மெய்யன்புடையீர் !

தங்கள் 13 — 12 — 90 ஆம் நாளிட்ட மடல் கிடைத்தது, நமது திருப்பெருந்திரு குருமகாசன்னிதானம் அவர்கள் திருக்கண் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். காரைக்குடி முத்துப்பட்டணத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழா 25 — 3 — 1991 ஆம் நாள் சிறப்புற நிகழத் திருவருள் கூட்டியிருப்பதை அறிந்து மகிழ்வு கொண்டார்கள். குடமுழுக்கு விழா விமரிசையாக நடந்தேறிடவும், விழாவை யொட்டி வெளியிட்டுக்கொள்ளும் மலர், சிவபெருமானின் பெருமை தனை விளக்கிடுவதாக அமைந்திடவும், விழாவுக்காகப் பல வகை களில் உழைத்திடும் அன்பர்கள் அனைவரும் ஒற்றுமையுடன், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் உணர்வுடன் திகழ்ந்து, நலமுடனும், வளமுடனும், மகிழ்வுடனும் பல்லாண்டு வாழ்ந்திடத் திருவருள் பாலிக்குமாறு தமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறார்கள்.

எல்லோர்க்கும் ஆசீர்வாதம் !

திருப்பெருந்திரு
மதுரை ஆதீனம்
குருமகாசன்னிதானம்
தலைமை அலுவலகம்
மதுரை - 625 001

திருப்பெருந்திரு குருமகா சன்னிதானம்
அவர்கள் அருளாணைப்படி

சு. பாலசுப்பிரமணியன்
ஆதீன மேலாளர்.

உ

சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ
காசிவிசுவநாத ஞான தேசிகர்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர் - 623 319
மானகிரி வழி,
ப. மு. மாவட்டம்.

தொலைபேசி காரைக்குடி { 2646

செல்லும் வழியெல்லாம் ஒளி வீச
தேடும் இடமெல்லாம் மனம் திருந்த
திருப்பு முனையாய் திசை திருப்பி - மீனாட்சி
வெல்லும் வழியையும் காட்டி வைப்பாள்

பொங்கும் மங்களம் அருள்வாள் மீனாட்சி
பூரண ஞானத்தை வழங்குவாள் மீனாட்சி
எங்கும் பேரொளி காட்டுவாள் மீனாட்சி
எல்லா மக்களையும் இரட்சிப்பாள் மீனாட்சி

எம்மை ஆட்கொண்டு முன்னின்று நடத்திச் செல்லும் திருநெல்லைத் தாயின் திருவருளால் மீனாட்சி அம்மன் குடமுழுக்கு விழாவும் வையகம் போற்ற, சீரும் சிறப்புடனும் நடைபெற்று நாடு நகரமெல்லாம் சுபிட்சம் பெற்று மக்கள் எல்லோரும் அமைதி வாழ்வை நோக்கிச் சென்று வாழ்வாங்கு வாழ்ந்துவர வாழ்த்துகின்றோம்.

சற்குருநாதன் துணை.

இரவீந்திர சுவாமிகள்
நகரத்தார் ஆண்கள் குருபீடம்

பாதரக்குடி நகரமடம்,
பாதரக்குடி.
வழி: காரைக்குடி

ஒரு நாமம் ஓருருவம் இல்லாத பரம்பொருளுக்கு ஓராயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டுவதும் கடவுளை அன்னையாகவும், தந்தையாகவும், நண்பனாகவும் நாயகனாகவும் கருதி வழிபடுவதும் நமது இந்துமதத்தின் தனிச்சிறப்பாகும்.

'யத்குணேன உபாசதே தத்குணோபவதி' இறைவனை எந்தப் பான்மையுடன் கருதி வழிபடுகிறோமோ அதே பான்மையுடன் இறைவன் நம்மிடமிருப்பான். நமக்கும் அதே தன்மை வந்து அமையும் என்று நமது சாத்திரங்கள் கூறுகின்றன. 'குபுத்ரோ ஜாயேதக் வசிதபிகுமாதா நபவதி' 'கெட்ட பிள்ளைகள் நிறையப் பிறக்கலாம், ஆனால் கெட்ட தாய் ஒருத்திகூட இருக்கமாட்டாள்' என்று ஸ்ரீ ஆதிசங்கரர் கூறுகிறார். எனவே அன்பே உருவானதாய் வடிவத்தில் கடவுளை வழிபடுவதால் கடவுளுடைய அருள் எளிதாகக் கிட்டும் என்பதுடன் உலகமக்கள் அனைவரையும் நமது குழந்தைகளாகக் கருதக்கூடிய தாயன்பு Universel love நமக்குக் கிட்டும்.

தனியாக வழிபடப்படுமிடங்களில் அம்பிகை பெரும்பாலும் உக்கிர வடிவத்துடனேயே காணப்படுகிறாள். அவ்வாறின்றி சாந்த மாகவும் அம்பாளைத் தனியாக வழிபடலாம் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகவும், உருவாருவக் கோட்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக ஆவுடையார் கோயிலில் இருப்பதுபோல்பீடவடிவில் வழிபடப்படுவதும் இவ்வாலயத்தின் தனிச்சிறப்புக்களாகும்.

நமது பரமகுருவாகிய கலாமடம் சுவாமிகள் அவர்கள் இங்கு ஸ்ரீசக்ரயந்திரப் பிரதிஷ்ட்டை செய்திருக்கிறார்கள். ஆலயங்கள் எங்கும் நிறைந்துள்ள இறையாற்றலைச் சேமித்துவைக்கும் சக்திகேந்திரங்களாகும். அவற்றைப் பன்னிரண்டாண்டுக்கு ஒருமுறை சரிபார்த்துத் திருப்பணி செய்யவேண்டியது அவசியமாகும். நீண்டகாலத்துக்குப் பிறகு இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதையறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ள மெய்யன்பர்களும் முத்துப்பட்டணம் நகரத்தார்களும் அம்பிகையின் திருவருளால் எல்லாவகைச் செல்வமும் குறைவறப்பெற்று நிறைவாழ்வு வாழவேண்டுமென வாழ்த்துகிறோம்.

இரவீந்திர சுவாமிகள்
1—3—1991

உ

வாழ்க தமிழ்! சிவமயம் வளர்க சைவம்!!

துலாவூர் ஆதீனம் - துலாவூர் 623 206

திருப்பெருந்திரு நிரம்ப அழகியதேசிகராகிய ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள்

மடாதிபதி — நகரத்தார் பெண்கள் குரு

காரைக்குடி முத்துப்பட்டணம் அருள்மிகு, மீனாக்ஷிஅம்மன் கோவில், திருக்குடமுழுக்கு விழா நிகழவிருப்பதை அறிந்து மகிழ்ந்தோம்.

திருக்குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெறவும் விழாமலர் மலர்ந்து சைவசமய மணம் கமழவும், இத்திருப்பணியில் மெய்யன்போடு ஈடுபடும் இரத்தின தன மகுடபூபால வைசிய சிரோன்மணிகளாகிய நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எல்லா நலன்களும் எய்த ஸ்ரீ மங்களாம்பிகை சமேத வாஞ்சீஸ்வரப் பெருமான் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

நலமே தழைக!

ஞானப்பிரகாசதேசிகர்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை

ஸ்ரீ-ல-ஸ்ரீ

சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமகாசந்நிதானம்

திருவாவடுதுறை ஆதீனம்

திருவாடுதுறை - 609 803

(தஞ்சாவூர் மாவட்டம்)

24—12—90

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க"

வாழ்த்துரை

காரைக்குடி முத்துப்பட்டணத்தில் அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் திருப்பணிகள் நிறைவெய்தி அண்மையில் திருக்குட நீராட்டுப் பெருவிழா நிகழவுள்ளமையும் விழாவில் இனிய நினைவு என்றும் நிலவி இன்பம் செய்ய மலரொன்று வெளியிடவுள்ளமையும் அறிந்து மகிழ்கிறோம்.

திருக்குட நீராட்டுவிழா இனிது நடைபெறவும் அன்பர்களின் அரிய படைப்புகளைக் கொண்டு தெய்வமணம் கமழ மலர்ந்து உலகு இன்புறவும் ஸ்ரீஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்

கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்

உ
சிவ சிவ

திருப்பனந்தாள் — 612504
(தஞ்சை மாவட்டம்)

வாழ்த்துரை

காரைக்குடி, முத்துப்பட்டணம், ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழா **25—3—91** அன்று நிகழவிருப்பதறிந்து மகிழ்ச்சி.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' - எனப் பால பாடம் முதல், 'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே' என முழுமைப் பட்ட சைவ சித்தாந்தச் செம்பொருள் முடிய, இறையுணர்வு பெருக வேண்டியதன் இன்றியமையாமையையும், வழிபாட்டு நெறி முறைகளின் செம்மையையும், ஆன்றோர் உரைத்தாங்கு வழிபட்டோரின் பேறுகளையும் வலியுறுத்திச் சொல்லி வருகின்றன. அவ்வழிப்பட்ட சிந்தனைத் தொடர்ச்சியினால் தமிழகமெங்கும் ஆலயம் நிர்மாணித்தலும், புதுப்பித்தலும் பல்கி வருகின்றன.

பத்தியின் பாலராகிப் பரம் பொருளுக்கு ஆளாம் அன்பர் தத்தமில் கூடிச் செய்கின்ற குடமுழுக்கு விழாச் சிறப்புற நிகழவும், விழா மலர் சமய மணமும் தமிழ் மணமும் கமழும் பொலிவுமிகு மலராக மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ

உ

சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சுவாமிகள்

ஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடம்

164 - தெற்குவெளி வீதி, மதுரை-1.

ஸ்ரீ செல்லப்ப சுவாமிகள் மடம்

காளையார் கோவில் - 623551

பிரமோதூத ஸ்ரீ தை மீ 25 உ 7-2-1991

அகண்ட பரிபூரண சச்சிதானந்த மூர்த்தியாய் விளங்கும் எம்பெருமான் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு எழுந்தருளிய திருமுறைத் திருத்தலங்களின் திருப்பணிகள், கும்பாபிஷேகங்கள் முதலிய அறப்பணிகளை மூவேந்தர்களுக்குப்பின் நானிலம் போற்றும் நிலையில் பல்லாற்றானும் ஆற்றிவருவதில் நாட்டுக்கோட்டை மகுட தனவைசியர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

பாண்டிவள நாட்டில் திருமுறைத் திருத்தலங்களான திருப்பெருந்துறை, திரு ஆடானை, திருக்கானப்பேர், திருப்புத்தூர், கொடுங்குன்றம் ஆகிய தலங்களின் நடுநாயகமாக விளங்கும் நகரப் பெருமக்களின் பெரும் நகரமாகிய காரைக்குடியின் ஒரு பகுதியான முத்துப்பட்டணம் நகரத்தார்களின் யோகசக்தி ஸ்ரீ அருள்மிகு மீனாக்ஷி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதும் மகிழ்ச்சிக்குரியது.

மகாகும்பாபிஷேக விழாவில் பங்குகொள்ளும் ஆஸ்தீகப் பெருமக்கள், முத்துப்பட்டணம் நகரத்தார்கள் யாவரும் அருள்பாலிக்கும் அம்பிகையின் அருளுக்கு பாத்தியமாகி எல்லா நலன்களுடன் இன்புற்று இனிது வாழ அன்னை பராசக்தி திருவடியை சிந்தித்து வாழ்த்துக்கின்றனம்.

வேணும்

ஸ்ரீ சற்குருநாதன் துணை.

சிவானந்த சுவாமிகள்

வி. என். சிதம்பரம்
21, கமலா தெரு,
சொக்கிகுளம்,
மதுரை - 2.

போன் : 43223
44881

தேதி : **28—2—91**

அன்புடையீர்,

வணக்கம். காரைக்குடி முத்துப்பட்டணத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடைபெற வும் அதனை ஒட்டி வெளிவர இருக்கும் குடமுழுக்கு விழா மலர் நல்லறிஞர்களின் கவிதை கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்து ஆன்மீக மணம் வீச வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
வி. என். சிதம்பரம்

உ
சிவமயம்

AL. AR. SM. Narayanan Chettiar

DEVAKOTTAI.

Date : 25—3—91

Palace : DEVAKOTTAI — P. M. Dist. — Pin. 623 302

காரைக்குடி முத்துப்பட்டணம் நகரத்தார் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் சுமார் 125 ஆண்டுப் பழைமை உடையது. முத்துப்பட்டணம் நகரத்தார்கள் மிகவும் பக்தி சிரத்தையுடன் அக்கோயிலைப் பராமரித்து வந்துள்ளனர். இப்பொழுது கோயிலைப் புதுப்பித்து நூதன பிரதிஷ்டைகள் செய்து மிகச் சிறப்பாகக் குடமுழுக்கு விழாக் கொண்டாடுவது பாராட்டுதற்குரியது. கோயிலில் தினம்தோறும் தேவார - மேள - நாதசுரமுழக்கம் கேட்க ஆவன செய்ய வேண்டுகிறேன். அனைவர்க்கும் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருள்பாலிக்கப் பிரார்த்திக்கிறேன்.

வேணும்,

ஸ்ரீ சுவர்ண காளீஸ்வரர் துணை

தொலைபேசி: அலுவலகம் 20040
இல்லம் 21741
தொலைவரி : வளர்தமிழ்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613001.

முனைவர். சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம். லிட், பி. எச்டி.,
துணைவேந்தர்

நாள் : 18—12—90

அன்புடையீர்,

வணக்கம்.

காரைக்குடி முத்துப்பட்டணத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா 25-3-1991-ஆம் நாளன்று நடைபெறுவதறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

இக் குடமுழுக்கு விழாவினையொட்டி மலர் ஒன்று மணம் பரப்பவிருப்பதனை அறிந்து நான் உளமகிழ்கின்றேன் இக் குடமுழுக்கு விழா இனிதே நடந்தேற அவன் அருளாலே அவன் தாள் வணங்குகின்றேன்.

இவ் இனிய விழாவினை முன்னின்று நடத்துகின்ற வள்ளல் பெருமக்கள் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன். இவ் அருட் பணியில் தங்களை ஆட்படுத்திக் கொண்டுள்ள உங்கள் அனைவரையும் அகமகிழ்ந்து வாழ்த்துவதிலே நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக் குடமுழுக்கு விழாப் பல்லாற்றானும் சிறக்க அருள்மிகு மீனாட்சி அம்மன் துணைபுரிவதாக.

சி. பாலசுப்பிரமணியன்

Justice
AR. LAKSHMANAN

"SWARNA"
48, Third Main Road,
Gandhi Nagar, Adyar,
Madras-600 020,

Phone : 41 25 67
41 82 78

13—2—1991

அன்புசால் திரு. அரு. சோ. அவர்கட்கு,

நலம். நலம் பல விழைக.

நகரத்தார்கள் கடவுள் தோற்றுவித்த கவின் பெருநெறியான சிவநெறியைப் பின்பற்றி சிவத்தொடர்புடைய சைவத்தை சமயமாகக் கொண்டவர்கள்.

ஆண்டவன் அடி தொழலே பூண்ட நற்றுறவு என்று கருதும் இல்வாழ்க்கையினர். சிவப்பற்றும், திருமுறைப்பற்றும் மிக்கவர்கள். அஞ்செழுத்தோதி ஆண்டவனை நாளும் அகமுற வழிபடுபவர்கள்.

தமிழகத்தில் தொன்றுதொட்டு நின்று நிலவும் நன்னெறி யாகிய சைவம் தழைப்பதற்கு தாளாளர்களாக இருந்து தலவரலாறுகள் சாகாமல் காத்தவர்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை உள்ள சிவத்தலங்கள் அனைத்தும் பொலிவோடு விளங்குவதற்கு பொருள் வலிவு தந்த வள்ளல் பெருமக்கள்.

இத்திறத்த நகரத்தார்கள் நடத்தும் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா இனிது நடைபெற எல்லாம் வல்ல இறையருள் தனிப் பெருங்கருணையை இறைஞ்சுகிறேன்.

பொற்கிழிக்கவிஞர், காசிஸ்ரீ தயாரிக்கும் மலர் மலர்ந்து மணம் பரப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தங்களன்புள்ள,

அரு. இலக்குமணன்

நீதிபதி.

கலைமாமணி, தமிழாகரர், பேராசிரியர்,
டாக்டர் **ஆறு. அழகப்பன்**, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழியல்துறைத் தலைவர்,
முதன்மையர், இந்தியமொழிப்புலம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் - 608 002.

7—1—91.

காரைக்குடி முத்துப்பட்டணத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் திருக்குடமுழுக்கு சிறப்பாக நடைபெறுவதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, நாகை நீலாயதாட்சி, மதுரை மீனாட்சி ஆகிய கீர்த்திமிகு பேரருட்சக்திகள் தம் திருநயனங்களால் உலகுயிர்களுக்கு அருள்வழங்கும் பாங்குடையவை. இவை பெற்றிருக்கும் அருள் வல்லமையைக் காரைக்குடி-முத்துப்பட்டணம் நகரத்தார் அருள்மிகு மீனாட்சியம்மன் கொண்டிலங்குவதால், உலகம் நன்னெறியில் தழைத்து ஓங்குவதாக. ஆகம முறைப்படி நடைபெறும் திருக்குடமுழுக்குப் பெருவிழா, இத்திருக்கோவிலுக்குப் புதுப் பொலிவும் வலிவும் வழங்கும் என்பது உறுதி

“முகரக் களிவண் டடைகிடக்கும்
மளரிக் கொடிக்குங் கலைக்கொடிக்கும்
முருந்து முறுவல் விருந்திடுபுன்
முரல் நெடுவெண் ணிலவெறிப்ப
மகரக் கருங்கட் செங்கனிவாய்
மடமான் கன்று வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே”

- மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-61

வாழிய உலகெலாம்.

அன்புள்ள,

ஆறு. அழகப்பன்

உ

சிவமயம்

O. RM M. SP. SV. AN.
ANNAMALAI CHETTIAR
Founder President
Sree Sevugan Annamalai College

27, Sathirathar Street,
DEVAKOTTAI.

Date............................19

காரைக்குடி முத்துப்பட்டணத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா 25—3—1991 அன்று சிறப்பாக நடைபெற இருப்பது அறிந்து மிக மகிழ்கிறேன்.

பொற்கிழி கவிஞர் அவர்களை பதிப்பாசிரியராக கொண்டு குடமுழுக்கு விழா மலர் வெளிவருவது சாலவும் பொருத்த மாகும்.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் குடமுழுக்கு சிறப்பாக நடைபெறவும் விழா மலர் நன்கு வெளிவரவும் அதன் மூலம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைக்க வும் பிரார்த்திக்கிறேன்.

அன்புள்ள,

அண்ணாமலை

உ

சிவமயம்

சா. குமரானந்த சுவாமி

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடாலயம்
மடப்புரம், திருவாரூர் - 610 002,
தஞ்சாவூர் ஜில்லா — தென் இந்தியா.

பிரமோதூத ஹூ மார்கழி மீ 5 வ. 20—12—1990

திருமிகு பொற்கிழிக் கவிஞர் காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரம் அவர்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது.

காரைக்குடி முத்துப்பட்டணம் அருள்மிகு மீனாக்ஷி அம்மன் கோவிலில் நடைபெறும் குடமுழுக்கு விழா சிறப்பாக நிகழவும், அதனை ஒட்டி வெளிவரும் குடமுழுக்கு விழா மலர் பல அறிஞர்களின் கட்டுரை தாங்கிப் பக்தர்கள் கையினில் உலாவி சைவமணம் பரப்பவும் அன்னை மீனாக்ஷியின் பொற் பாதம் பணிந்து பிரார்த்தித்து வாழ்த்தினைத் தெரிவிக்கிறோம்.

சுவாமிகள் சொல்படி,

அ. தக்ஷிணாமூர்த்தி
கணக்கன்

கும்பாபிடேகக் குழு 1991



அரு. மு. மு. அருணாசலம்
செட்டியார்
தலைவர்



சித சிதம்பரம்
உப தலைவர்




கதி. ராம. சோம.
அண்ணாமலை செட்டியார்
செயலாளர்



சேவு மெய்யப்ப
செட்டியார்
செயலாளர்



அரு. மு. மு. சி. ராம.
ராமசாமி செட்டியார்
பொருளாளர்



கும்பாபிடேக மலர்க் குழுவினர் 1991



சித. சிதம்பரம்
தலைவர்



அ. சே. கி. சேக்கப்ப செட்டியார்
செயலாளர்



அரு. மு. மு. சி. ராம, ராமசாமி செட்டியார்
பொருளாளர்



பொற்கிழிக் கவிஞர், காசிஸ்ரீ, அரு. சோமசுந்தரன்
M. A. B. T.,
பதிப்பாசிரியர்



R. இராசேந்திரன்
நட்ப்புக்காரியக்காரர்

கும்பாபிஷேக திருப்பணிக்கு உதவியவர்கள்

அரு. மு. மு. அருணாசலம் செட்டியார்
மெ. மெ. சி. சேவு. குடும்பத்தார்
அரு. மு.மு ராமனுதன் செட்டியார்
அரு. மு. மு. சுப்பிரமணியன் செட்டியார்
அரு. மு. மு. சி. ராம. ராமசாமி செட்டியார்
க. மெ. மெ. பழ. சண்முகம் செட்டியார்
நா. வீர. குடும்பத்தார்
கரு. வீர. சோம. வீர. குடும்பத்தார்
கி சு ப. வி, சண்முகம் செட்டியார்
சொ. நா. குடும்பத்தார்
சித. நா. இராம, குடும்பத்தார்
மெ, நா, முத்தையா செட்டியார்
ராம. சுப்பையா செட்டியார்
எஸ்பி. முத்துராமன்
வெ. சோம. ராமனுதன் செட்டியார்
M. மீனாட்சி
சுப. மு நா வீர. குடும்பத்தார்
சுப சு சு சுப. குடும்பத்தார்
கண பஞ்சு அருணாசலம்
கி வி. முருகப்பசெட்டியார்
நா சா. நாராயணன்செட்டியார் &
சிதம்பரம் செட்டியார்
ராம பழ. மாணிக்கம் செட்டியார்
சுப ராம நா. நாச்சியப்ப செட்டியார்
வ ராம, குடும்பத்தார்
கதி. ராம, சுப.
வெ ராம, பொது
KN. சுப்பு
ராம வீர சித, சிதம்பரம் செட்டியார்
ராம. நாராயணன் செட்டியார்
மெ பழ. மெய்யப்ப செட்டியார்
பெரி நா நா அ. குடும்பத்தார்

கதி ராம சோம. அண்ணாமலை செட்டியார்
கரு வ அள. வீரப்ப செட்டியார்
வெ பழ வெ. பழனியப்ப செட்டியார்
K AR M. முத்து செட்டியார்
மெ நா லெ. சுப்பிரமணியன் செட்டியார்
அ சே கி. சேக்கப்ப செட்டியார்
கண்மணிசுப்பு
சுப அரு. சுப்பிரமணியன் செட்டியார்
சா நா அ அழ சொ அழகப்ப செட்டியார்
சிவம் தியேட்டர்
SP. சுப்பிரமணியன்
மெ வீர பிரைவேட் டிரஸ்ட்
அ மு க மு க கரு. முத்துக்கருப்பன் செட்டியார்
ப ராம பிரைவேட் டிரஸ்ட்
சொ நா சி. சின்னக்கருப்பி ஆச்சி
சா சு முருகப்ப செட்டியார்
பழ சி மு. சேது செட்டியார்
PL RM RM. ராமசாமி செட்டியார்
கதி முரு ருதி. குடும்பத்தார்
மெ சு தி சுப. கண்ணன் செட்டியார்
அரு கண. கிருஷ்ணன்
சுப சுவாமிநாதன்
அ நா பழ நா. பொன்னழகி ஆச்சி
நா வ நா. நடேசன் செட்டியார்
மெ மெ. லெட்சுமணன் செட்டியார்
ராம மு அ. கணேசன் செட்டியார்
ஆவி ராம சுப ராம சுப. சத்தியவாகீசன்
அள அ நா
மெய மெ. வெங்கிடாசலம் செட்டியார்
சா லெ நா சா. சாத்தப்ப செட்டியார்
அ. திருநாவுக்கரசு செட்டியார்
மு ராம சொ பெரி சொ.
சா அரு நா அரு.
அழ பழ. பழனியப்ப செட்டியார்
க. சுப்பிரமணியன்
ப மு சித.
சொ ராம அரு

ர. முத்துக்கணேசன் செட்டியார்
நா மெ மெ சோம குடும்பத்தார்
சி மு அரு
நா நா ப ந பஞ்சநதம் செட்டியார்
ப சு ராம அண
N N சாமிநாதன் செட்டியார்
கா சித நா சிதம்பரம்
அரு வி அரு மு சா மீனுட்சிசுந்தரம்
க அள ராம கரு ரா்ய
சிவ மெ பொது குடும்பம்
பெரி க
அ ராம நா ஆ. ராமசாமி செட்டியார்
அ மு க மு சித மு சிதம்பரம் செட்டியார்
வெ தெ மாணிக்கம்
கரு வ அள சிவகாமி ஆச்சி
KN சுப்பையா
ராம சுப்பையா செட்டியார்
சித சிதம்பரம்
சா நா அ சொ அ
ராம பழனியப்பன்
சௌத் இந்தியா கார்ப்பரேஷன் கோவை
நாச்சம்மை பைனுன்ஸ்
ஆர்வோ பிலிம்ஸ்
மெ நா மெ நா மெய்யப்ப செட்டியார்
ஜமீன் சொ
க தெ க அழ அழ அழகப்பன்
SP S RM SP ராமு
அள ராம அள சுப்பிரமணியன் செட்டியார்
சா நா அ அள சித மீனுட்சி ஆச்சி
RM மெய்யப்ப செட்டியார் (சக்தி பைனான்ஸ்)
மெ பழ குடும்பத்தார்
சொ மெ மெய்யப்ப செட்டியார்

சன்னதிகளுக்கு விக்ரகம் செய்து கொடுத்தவர்கள்

விஸ்வேஸ்வரர் – விசாலாட்சி

சிதசு. நா. ராம. குடும்பத்தார்

சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை

அரு. மு. மு. அருணாசலம் செட்டியார்

தெட்சிணாமூர்த்தி :

கரு வீர சோம வீர குடும்பத்தார்

நவக்கிரஹம் :

அரு சி மெ மெ மெ சீதை ஆச்சி

சண்டீஸ்வரர் : **முத்துப்பட்டணம் நகரத்தார்**

உற்சவ விக்கிரகம் :

க மெ மெ பழ சண்முகம்செட்டியார்

சன்னதிகளுக்கு, சலவைக்கல், மொசைக்கல், பதித்து உதவியவர்கள்

சன்னதி	இடம்	பெயர்
பிள்ளையார்	உள் மண்டபம்	Er M அருணாசலம்
,,	வெளிமண்டபம்	Er PL மாணிக்கம்செட்டியார்
சுப்பிரமணியர் வள்ளி	உள் மண்டபம்	KN ரெத்தினம் செட்டியார்
தெய்வானை	வெளிமண்டபம் தரை	உ ராமனுதன் செட்டியார்
,,	வெளி மண்டபம்	மெ மெ சி சேவு குடும்பத்தார்
தெட்சிணாமூர்த்தி	உள் மண்டபம்	கரு வீர சோம வீர குடும்பத்தார்
விஸ்வேஸ்பரர்-விசாலாட்சி	உள்மண்படம்	மெ நா முத்தையா செட்டியார்
மீனாட்சி அம்மன்	கற்பககிரஹம்	அரு மு மு சி ராம ராமசாமி செட்டியார்
,,	கற்பககிரஹத்தில் பீடம்	அண ராமன்செட்டியார்
,,	அர்த்தமண்டபம்	அரு மு மு சி ராம ராமசாமி செட்டியார் மகன்கள் & மகள்கள்
,,	மகாமண்டபம் தரை	அரு மு மு சுப்பிரமணியன் செட்டியார்
,,	முன்மண்டபம் தரை	,,

வெளிசுற்று பிரகாரம் யானை அடிக்கல் பதித்து உதவியவர்

மு மெ மு முத்தையா செட்டியார்

அருள்மிகு மீனாட்சி அம்மன் பீடத்திற்கு வெள்ளி பட்டயம் உதவியவர் :

சா சு முரு கணேசன் செட்டியார்

மீனாட்சி அம்மை வாழ்த்து

(கவிச்செம்மல், டாக்டர் ரெ. முத்துக்கணேசன்)

திருவிளக்கே! வைரக் குன்றே!
தெளிவுடையார் நெஞ்சில் தோன்றும்
மருளுருவ ஆண வத்தின்
மதம்போக்கும் வீரச் செல்வி!
திருவளர்க்கும் நகரத் தார்தம்
திருக்கோயில் கொண்டு வாழும்
அருளுருமீ னாட்சி அம்மா!
அடைக்கலம் காப்பாய் போற்றி!

தீதிலா அருவி வீழத்
திருளுமின் சக்தி போல
ஓதியே உன்றன் நாமம்
உருகிட ஞானம் ஈவாய்;
நீதியே! செல்வ ஊற்றே!
நிறைத்துப் பட்ட ணம்வாழ்
ஆதிமீ னாட்சி அம்மா!
அடைக்கலம் காப்பாய் போற்றி!

பூவினில் மணமும் நீயே
புதுப்புதுக் கலைகள் நீயே
பாவினில் தமிழே ஆகிப்
பயன்தரு நூலும் நீயே
கோவிலில் பீட மாகிக்
கொலுவிருந் தருளைப் பெய்யும்
தேவிமீ னாட்சித் தேவே!
அடைக்கலம் காப்பாய் போற்றி!

உ

"ஞானத் தென்றல் முத்துராமலிங்க ஆண்டவர்"

முதல்வர், தெ. முருகசாமி

சீர்வளரும் காரைக்குடி முத்துப் பட்டணச்
சிங்கார நகரிலுயர் நகரத் தார்கள்
பேர்வளர வளர்ந்துவரும் பெருமை மிக்க
பெரியதமிழ் மீனாட்சி அம்மன் கோயில்
ஏர்வளர எடுப்பித்த கும்பந் தன்னில்
எழிலாகச் சொரிந்திட்ட நன்னீ ராட்டால்
ஊர்வளர உலகுயர உய்யக் கொள்ளும்
உயர்மீனாள் சுந்தரேசர் பாதம் போற்றி.

திருநெல்லை யம்மன்வாழ் கோயி லூரில்
திகழ்கின்ற நற்கொற்ற வாளின் ஈசர்
திருவருளின் பெருக்கைப்போல் திகழ்ந்து தோன்றும்
தென்கயிலை மலைபோன்ற திரும டத்தின்
பெருமைமிகு வரலாறு பேசப் பேசப்
பெரியதென வணிகர்குல மாட்சி யெல்லாம்
உருகுபனிக் கட்டியென உள்ளந் தன்னில்
உயிர்மெய்யாய் உணர்வோடே கலக்கும் அம்மா.

மன்னர்பின் னோர்களெனப் பெயரைப் பெற்ற
மதிப்புமிகு நகரத்தார் மரபில் வந்த
முன்னவர்கள் வாழ்ந்துவரும் தொண்ணூற் றாறு
முத்தான வட்டகைக்குள் முதலாய்த் தோன்றும்
மன்னுபெருங் கல்விவளர் காரைக் குடியில்
மங்கலஞ்சேர் கொப்பாத்தா கோயில் மேற்கே
இன்னும்வளர் கோயிலூரை ஆளு தற்கே
இளம்பிள்ளை ஆண்டவரும் தோன்றி னாரே.

மெய்யப்பர் வள்ளியம்மை பெற்ற மைந்தர்
முத்துராம லிங்கரென முத்திக் கென்றே
உய்யபெரும் பெயர்பெற்றார், உலகோர் போற்ற
உயிர்நண்பர் நல்லானின் நட்பால் நாளும்
அய்யமிகு அஞ்ஞானம் போக்கிக் கொண்ட
அருள்ஞானத் தாகத்தால் அலைந்து, தீமை
பெய்யவந்த பொய்வாழ்வை நீக்கிக் கொள்ளப்
புறப்பட்ட மனத்திற்கோர் குருவைக் கண்டார்.

நாகைக்கா ரோணத்துச் சிக்கல் என்னும்
நற்றலத்தில் உகந்தகுரு சாமி யாராம்
வாகைமிகு பெரியவரை வாஞ்சை யோடு
வண்குருவாய்க் கண்டமுதல் விவேகி யாகி
ஈகைமிகு நகரத்தார் இருப்பாய்த் தோன்றும்
இன்றுள்ள கோயிலூரை அன்றே கண்டு
தோகைமயில் நெல்லையம்மன் குழைந்த ளித்த
தொகுஞானப் பாலருந்தித் தங்க லானார்.

ஆடையா பரணத்தில் ஆசை யின்றி
ஆண்டவனார் ஆனதுமே அறிவின் வீச்சாய்க்
கோடையிலே வீசுகின்ற ஞானத் தென்றல்
கோலோச்சும் திருமடத்தின் குருவாய்த் தோன்றி
வாடைகுளிர் அடிக்கின்ற வாழ்க்கை தன்னை
வாசிட்ட நூல்முதலாய் வந்தோர்க் கெல்லாம்
மேடையிட்டு மேன்மையுடன் சொல்லச் சொல்ல
மேன்மேலும் வளர்ந்ததுவே கோயி லூரும்.

கொற்றவா னீசர்க்குக் கோயில், அம்மன்
கொலுவீற் றிருக்கைக்கோர் கூடம், மற்றும்
உற்றபரி வாரத்தின் தெய்வங் கட்கும்
உரியபடி மாடங்கள், உற்ச வாதி
முற்றுவிக்கும் சந்நிதிகள் முன்மண் டபங்கள்
முப்போதும் நீர்நிறையும் திருக்கு ளங்கள்
கற்றறியக் கலாசாலை, ஞானக் கூத்து
கலந்திருக்கும் சத்திரங்கள் கட்டி னாரே!

பழனிக்கு நடக்கின்ற நகரத் தாரின்
பழகுதமிழ் மரபிலுயர் ஆண்ட வர்தாம்
கழனியூர்க்கு நடந்திட்ட கார ணத்தால்
கற்சிலையால் பெருமைபெறும் கோயி லூரும்
அழகுதிரு வாசகத்தான் ஆக்கு வித்த
அருளார்ந்த ஆவுடையார் கோயில் போல
முழவதிர்ந்தே ஆண்டபெரும் பாண்டி நாட்டில்
முளைத்திட்ட செட்டிநாட்டில் திகழு மாலோ!

அரியகுடித் திருமாலை அகத்தில் கொண்டும்
ஆனைமுகப் பிள்ளையார் பட்டி மீதும்
தெரியவந்த கொப்பாத்தா காட்சி கண்டும்
தேரார்ந்த திருப்பெருந் துறையைப் பார்த்தும்
கரியமயில் சூழ்மாத்தூர் கடவு ளோடே
காணரிய குருவையுமே கருத்தில் போற்றி
உரியபடி நூல்பலவும் செய்து, தம்மின்
ஓயாத சுகானுபவம் அருளி னாரே!

தெய்வத்திரு கோட்டையெனும் தேவ கோட்டை
திகழ்ந்திட்ட அருணாசலர், இராம நாதர்,
உய்விக்கும் பள்ளத்தூர் உயர்சின் னய்யா,
உத்தமராம் இராயவர அப்புக் குட்டி
அய்யனார் அருள்கின்ற சாளி கிராமம்
அண்டிவாழ் அருந்தச்சன் போன்றோர்க் கெல்லாம்
உய்யும்வகை காட்டிவந்த ஆண்ட வர்தாம்
உலகறியத் தொண்டுசெயும் நகரத் தாரின்,

மரபுவழி கோயிலூரில் மடால யத்தை
மன்னியதால் மண்ணுலகம் உள்ள மட்டும்
வரவுவர வரவுவர வளர்ந்து நாளும்
வளர்கல்வி கற்போர்கள் வந்து தங்கி
இரவுபகல் உணவுண்டு வாழ்நா ளெல்லாம்
இதயத்தால் நன்றிசொலும் காட்சி தம்மைக்
கரவறியா உள்ளத்தால் காண்போர்க் கெல்லாம்
கருணைக்கடல் ஆண்டவரே கருத்தில் நிற்பார்.

வழிவழியாய் ஆண்டவனார் அருள்கொ ழிக்கும்
வேதாந்தத் திருமடத்தின் இற்றை நாளில்
மொழிவழியாய்த் தேவிதேவி என்றே கூறி
மோந்துச்சி பார்க்கின்ற தாயைப் போல
விழிவழியாய் அருள்செய்யும் இராம நாதர்
வீறுபுகழ் ஆசியுடன் கோயி லூர்தாம்
எழிலுருவாய் மலருவதால் எங்கும் உள்ள
ஏற்றதிரு வருளெண்ணி வாழ்த்து வோமே!

வழிபாடு

[டாக்டர் வெ. சு. அழகப்பன் - அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.]

தனி வழிபாடு:

வழிபாடு என்பது, வழி+பாடு என்னும் இரு சொல் இணைந்து ஒரு சொல் நீர்மைப்பட்டிருக்கிறது. செயற்பாடு, பண்பாடு, கூப்பாடு என்பன போல, வழிபாடு என்ற சொல்லும் அமையும். இறைவனிடம் மனத்தை வழிப்படுத்துவது அல்லது இறையன்பில் தோய்வதற்குச்சரியை, கிரியை வழிகளால் முயல்வதே வழிபாடு. இறைவனை அடையும் வழிகள் நான்கு எனச் சைவசமயம் பேசும். யோகம், ஞானம் என்ற மற்றைய இரு வழிகளும் வழிபாட்டில் அடங்கும். இதனைப் 'பக்தியோகம்' என்பர். மற்றது, அஷ்டாங்க யோகமாகும். இதனைப் பதஞ்சலி கூறியுள்ளார். 1. புலனடக்கம் (இயமம்) 2. நித்தியகருமம் (நியமம்), 3. இருக்கை (ஆசனம்), 4. மூச்சுக் கட்டுப்பாடு (பிராணாயாமம்). 5 பொறிக்கட்டுப்பாடு (பிரத்யாகாரம்), 6. மன ஒருமை (தாரணை) 7. இடைவிடா இறைச்சிந்தனை (தியானம்), 8. உணர்வுகடந்த நிலை (சமாதி).

வேதகாலத்தில், முனிவர்கள் தம் மனைவியோடு காட்டகத்தே சென்று, காலை மாலை, இரவு என்ற முப்போதும் யோகம், யாகம், அக்னிகாரியம் ஆகியவற்றைத் தனிப்பட்ட வகையில் செய்தனர். இது 'வானப்பிரஸ்தம்' எனப்படும். சில முனிவர்கள் நிஷ்டிக பிரமச்சாரியாக விளங்கி 'சன்னியாசம்' ஏற்று எல்லாக் காரியங்களிலும் இறைச் சிந்தனையோடு விளங்கினர். இவ்வழிபாடெல்லாம் தனி வழிபாடே.

ஒருவர், தன் வீட்டிலோ ஆலயத்திலோ தனித்து நின்று ஏதேனும் ஒரு தெய்வத்தை வழிபடுவதும் தனி வழிபாடே. வழிபடு கடவுள் குலதெய்வமாகவும் இருக்கலாம்; ஒரு குறிப்பிட்ட வழிபடு தெய்வமாகவும் இருக்கலாம். அவரவர் வழிபடு தெய்வத்திற்குத் தீபதூபங்கள் காட்டியும், மலரிட்டும், நிவேதனங்கள் படைத்தும், மந்திரங்கள் ஓதியும், முன்னோர் செய்த தெய்வவழிபாட்டுப் பாமாலைகளை இனிமையுற இசைத்தும் மனோவாக்குக் காயங்களால் வழிபாடு செய்ய வேண்டும். அவ்ரவர் தெய்வத்திற்குரிய மந்திரங்களையும், பழம் பாடல்களையும் மன ஒருமைப்பாட்டோடு சொல்லுதலே இன்றியமையாததாகும். தனி ஒருவர் தெய்வத்தை வணங்குவது இரண்டு வகை. தனக்காகவும் தன் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களுக்காகவும் ஒருவர் தெய்வத்திடம் வேண்டிக்கொள்ளலாம். இது ஆத்மார்த்த பூஜை எனப்படும். முன்பின் தெரியாத பிறருக்காகவும் தம் நண்பர்களுக்காகவும் உலக மக்களின்

பொதுநன்மைக்காகவும் வேண்டிக்கொள்வது பரார்த்த பூசையாகும். கோவிலில் சென்று வழிபடுவதே பரார்த்த பூசை. அதாவது, கோயிலில் உலக நன்மைக்காக வேண்டுவதே நம் வழக்கு. இதனைத் தனித்து ஒருவனும் செய்யலாம், கூட்டாகவும் செய்யலாம்.

பெரியபுராணத்தில் காணப்படும் பல அடியார்கள் தனி ஒருவராக வழிபட்டவையே. பூசலார் நாயனார், மங்கையர்க்கரசியார், இயற்பகை நாயனார், மெய்ப்பொருள் நாயனார் என்று இப்படிப் பலரும் தனிவழிபாடு செய்தவர்களே.

அண்மைக் காலத்தில் ஆண்ட கட்டப்பொம்மனும் நாள்தோறும் தன் வழிபடுகடவுளான செந்திலாண்டவனை வணங்கிய பின்னே உணவு உட்கொள்வது என்ற விதியைக் கடைப்பிடித்தான். இவ்வாறே இன்றும் பலர் சிவபூசை முதலிய பூசைகளைத் தனி ஒருவராக இயற்றி வழிபாடு செய்து, பின்னரே உணவு உட்கொள்வர். இதனால் ஆத்மபலமும் குடும்ப நலனும் பெருகும்.

கூட்டுவழிபாடு:

'கூடு' என்பதற்குச் சேர்தல் என்பது பொருள். ஆறுகள் கலப்பதை 'கூடல்' என்றும், புலவர்கள் கூடிய நகரைக் கூடல் என்றும், ஒரு காரியம் நிறைவேறுவதைக் கைகூடுவது என்றும் கூறுகிறோம். ஆகவே கூடுதல் என்பது தனித்தனியாக இருப்பவர்கள் ஒன்று சேர்தலாகும். ஒரு பக்தர் தன் வீட்டில் வழிபடுவது தனி வழிபாடு பலரும் ஒன்று சேர்ந்து ஒரு கோயிலிலோ ஒரு தலத்திலோ நின்று வணங்குவது கூட்டு வழிபாடு. ஞானசம்பந்தர், அப்பர் இருவரும் பல தலங்களுக்கு ஒன்றாகச் சென்று வழிபட்டது, கூட்டு வழிபாடு ஒவ்வொரு தலத்திலும் இவ்விருவரையும் வரவேற்று அத்தலத்தில் தேவாரத்தைப் பாடி மற்றைய பக்தர்களும் அவ்விருவரோடும் கூடித் தெய்வத்தைப் பரவினர்; இதுவும் கூட்டு வழிபாடே. பக்தி இயக்கம் பரவுவதற்கு இத்தகு கூட்டு வழிபாடே முதன்மைக் காரணம் ஆகும். தண்டமிழ்ப் பாக்களைத் தேவார ஆசிரியர்கள் தாளக்கட்டோடு இசைபாடி நாளும் பரவியதால் கோயிலில் அடியார்கள் திரளாகக்கூடி இவ்விசையில் ஈடுபட்டுத் தெய்வ அருளுக்குப் பாத்திர மாயினர். எனவே கூட்டு வழிபாடு பக்தியையும், தமிழையும், அக்காலத்தில் முறைப்பட வளர்த்தன என்று துணியலாம் மேலும் ஒவ்வொரு தலமாக அவ்வடியார்கள் பயணம் செய்து கூட்டாக வழிபாடியற்றித் தமிழிசையையும் வளர்த்தனர். தேவார காலத்தில் தெய்வங்களுள் சிவபெருமான் ஒருவருக்கே பாடல்கள் இசைத்தனர், விநாயகர், சுப்பிரமணியர், அம்மை சிவகாமி

முதலியோருக்குத் தனிப் பாடல்கள் இல்லை. எனவே சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதும் அவனுக்கு மட்டுமே பாடல்கள் இசைப்பது என்பதும் அந்நாளையக் கொள்கையாக இருந்தது. ஆகவே சிவலிங்கச் சன்னிதியில் மட்டும் அடியார்கள் குழுமி சிவபிரானின் பெருமைகளைப் பாடல்களாகப் பாடிக் கூட்டாக வழிபட்டார்கள்.

ஆனால் இந்நாளில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் அஃதாவது விநாயகர், முருகன், தட்சிணாமூர்த்தி, சக்தி என்று தனித்தனியாகத் தோத்திரப் பாடல்கள் இயற்றப்பெற்ற பின்னர் அவற்றை அவ்வச் சன்னிதிகளில் நின்று பல அடியார்கள் கூடி அப்பாடல்களைப் பாடுவராயினர். கூட்டு வழிபாட்டில் தனி நபர்களின் வேண்டுகோளுக்கு இடமிருக்க வாய்ப்பில்லை. ஆகவே, இறைப் பெருமையைப் பேசும் பொதுப் பாடல்களைப் பாடிப் பொது நன்மையை மட்டுமே வேண்டிக்கொள்ள முடியும். ஆகவேதான் கூட்டு வழிபாடு என்பது கோயில்களிலும் சன்னிதிகளிலும் தல வழிபாடாகவும் விளங்கி, பராத்த வழிபாடாக அமைகின்றது. இவ்விரு வழிபாடுகளிலுள்ளும் தன்னலம் துறந்த பொது வழிபாடான கூட்டு வழிபாடே சாலச் சிறந்தது. முகமதியர், கிறித்துவர் கூட்டு வழிபாடு நடத்துகிறார்கள். காந்தியடிகள் கூட்டு வழிபாடு நிகழ்த்தினார். 'குமுதம் இதழ்' இன்று கூட்டுவழிபாடு நிகழ்த்தத் தூண்டி வருகிறது.

பனிநோயால் மக்கள் வாடியபோது அப்பனிச்சுர நோய்தீர சுந்தரர் பரார்த்த நிலையில் இறைவனை வேண்டிப் பாடுகிறார். உலக மக்கள் பஞ்சத்தில் வாடியபோது அப்பஞ்சம் தீர இறைவன் அருளவேண்டும் எனத் திருஞானசம்பந்தரும், அப்பரும் திருவீழிமிழலையில் வேண்டிப் பாடினர். கூட்டுவழிபாடு என்பது சமுதாய நன்மையை நாடும் பொது வழிபாடு என்று நாம் தெளியலாம்.

முடிவுரை :

காரைக்குடியில் ஆகம வழியாக நடக்கும் கோயில்களும், சிறு தெய்வ வழிபாடும் உண்டு. நாகநாதபுரம் சிவன்கோவில் காரைக்குடியில் முதலில் தோன்றிய கோயில். அது 120 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அதனை அடுத்து நகரச்சிவன்கோவில் தோன்றியது. அதனைஒட்டி முத்துப்பட்டணம் மீனாட்சிஅம்மன் கோவில் தோன்றியது. மூன்று கோயில்களும் சுமார் 120 ஆண்டுப் பழைமை உடையன. செக்காலையிலும் சுமார் 30 ஆண்டுகட்கு முன்னர் இருந்து சிவன்கோவில் எழுப்பும் முயற்சி நடக்கிறது.

இவை தவிர கிராம தேவதையாக ஆனால் ஆகம முறையில் ஐயரால் வழிபாடு நடக்கும் கோவில் கல்லுக்கட்டி கொப்புடையம்மன் கோவிலாகும். இதுவும் 150 ஆண்டுகளுக்குக் குறையாமல் இருந்துவரும் கோவிலாகும்.

கிணற்றடிக்காளியம்மன் கோவில், முத்துப்பட்டணம் முத்துமாரி அம்மன்கோவில் ஆகியன அண்மையில் தோன்றியவை.

முனியையா கோவில் 80 ஆண்டுக்கு முன்னர் தோன்றியது. சிவகாளியம்மன் கோவில் இரண்டு ஆண்டுகட்கு முன்னர் வந்தது. 108 பிள்ளையார் கோவில் ஆகம வழிபாட்டில் ஓராண்டுக்கு முன்னர் ஏற்படுத்தப்பெற்றது. ஐயப்பன் கோவில், அனுமார் கோவில் ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. மக்கட்கு அமைதியும் இன்பமும் நல்கக் காரை மாநகரில் பல கோயில்கள் உண்டு, அவை அருள் பாலிக்கும்.

கர்நாடக நகரத்தார் சங்கம் - திருப்பணிகள்

(ஆர். சுப்பிரமணியன் - செயலர்)

கருநாடக நகரத்தார் சங்கம், 1983ல் சுமார் 150 உறுப்பினர்களைக் கொண்டு திரு. A. L. முத்தையா அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்று செவ்வனே இயங்கிவருகிறது. கடந்த எட்டு ஆண்டுகளாக ஏகோபித்த வேண்டுகோளின்பேரில் திரு A. L. முத்தையா அவர்களே தொடர்ந்து தலைவராக இருந்து வருகிறார்கள். தொடக்கத்தில் திரு. N. கதிரேசன் அவர்களும், பிறகு திரு. PR. பெரியகருப்பன் அவர்களும் பொதுச் செயலாளராக இருந்தனர். கடந்த 4 ஆண்டுகளாக திரு. R. சுப்பிரமணியன் அவர்கள் பொதுச் செயலாளராக பொறுப்பேற்று சிறப்புற நடத்தி வருகிறார்கள் தொடக்க காலத்தில் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி திரு. KM. CT. நாராயணன், இந்தியன் வங்கி திரு. ST. சுப்பையா மற்றும் மதுரை வங்கி திரு உடையப்பன் முதலானோர் சங்க வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டனர். தற்சமயம் சங்கத்தில் 10 காப்பாளர்களும் சுமார் 200 ஆயுள் உறுப்பினர்களும் சுமார் 100 உறுப்பினர்களும் இருந்து வருகின்றனர்.

சங்கத்தின் பணிகள்:

1 ஆண்டுதோறும் தைத்திங்கள் அனுட நட்சத்திரத்தில் நகரத்தார் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சுமார் 75 பேர்கள் பால்குடம் ஏந்தி விஸ்வேஸ்வரபுரம் ஸ்ரீ முருகன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு கால் நடையாக, சுமார் 12 கிலோ மீட்டர் தூரம் நடந்து இராஜேஸ்வரி நகர், கைலாச ஆஸ்ரமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாளுக்கு மஹா அபிஷேகம் செய்து அன்னதானம் அளித்து வருகிறோம்,

2 ஆண்டுதோறும் ஆடி வெள்ளிக்கிழமையன்று சுமார் 51 நகரத்தார் பெண்களைக்கொண்டு திருவிளக்குப் பூஜை நடத்தி வருகிறோம்.

3 ஆண்டுதோறும் பிள்ளையார் நோன்பு நடத்தி வருகிறோம்.

4 ஆண்டுதோறும் முக்கிய ஸ்தலங்களுக்கு சுற்றுலா ஏற்பபாடு செய்து வருகிறோம்.

5 இராமேஸ்வரத்தில் இருந்து ஸ்ரீ காசிக்கு பாதயாத்திரை சென்ற குழுவிற்கு 1983, 1990 ஆண்டுகளில் 3 நாட்கள் பெங்களூரில் வரவேற்று உபசரித்தோம்,

6 எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களின் திருமணத்திற்கு ரூ. 2500/- நன்கொடை நல்கி வருகிறோம். அதேபோல் பிள்ளையார்பட்டியில் திருச்சி நகரத்தார் சங்கத்தினரால் நடத்திவைக்கப்படும் கூட்டுத் திருமணத்திற்கு திருமணம் ஒன்றுக்கு ரூ. 2000/- வீதம் நன்கொடை நல்கிவருகிறோம்.

7 உயர் கல்வியிலும் ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்க நிதிஉதவி செய்து வருகிறோம்.

8 நகரத்தார்கள் வந்தால் தங்குவதற்கு நகர விடுதியுடன் கூடிய திருமண மண்டபம் ஒன்று கட்ட ஏற்பாடு செய்து வருகிறோம்.

9 பெங்களூரில் உள்ள நகரத்தார்கள் அனைவரின் முகவரி அடங்கிய கையேடு ஒன்று வெளியிட ஏற்பாடு செய்துவருகிறோம்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

Karnataka Nagarathar Sangam,
34, Rajmahal Vilas Extension,
Bangalore - 560 080.

பெங்களூர் அருகில் 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கஞ்சனஹள்ளியில் எழுந்தருளி இருக்கும் இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோயில் திருவிழா 10 நாள் உற்சவம் கண்கொள்ளாக் காட்சியாகும். அதனை ஒவ்வொருவரும் பார்க்கவேண்டும். ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்மன் திருவருளாலும், ஸ்ரீலஸ்ரீ திருச்சி சுவாமிகளின் ஆசியாலும் நகரத்தார்களுக்கு ஒரு குறைவும் இல்லை. திருப்பணிகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை.



ஹைதராபாத் செகந்தராபாத்
நகரத்தார் சங்கம் - திருப்பணிகள்
(AL. வெங்கடாசலம் செயலர்)

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூக - கலாச்சார சங்கம்

ஹைதராபாத் - செகந்திராபாத்

[பதிவு எண்: 2331 — 5 - 12 - 81]

கூடிவாழ்ந்தால் கோடி நன்மை என்ற பொன்மொழிக்கிணங்க ஜனவரித் திங்கள் 13-ம் நாள் 79-ம் ஆண்டு சங்கம் துவங்கப்பட்டு 5-12-81 பதிவு செய்யப்பட்டது.

ஆயிரம் மைலுக்கப்பால் வந்திருக்கும் நாங்கள் அன்போடு கூடி ஒற்றுமையை வலுப்படுத்த ஒருபாலமாக அமைந்திருக்கிறது இச்சங்கம். சமூக - கலாச்சார பணிகளாக நாங்கள் நடத்தி மகிழும் சில நிகழ்ச்சிகள்.

1) A **கல்விப்பணி:** நம் இனத்தை சேர்ந்தவருக்கு ரூபாய் 300 கொடுத்து வருகிறோம். [ஒருவர் அல்லது இருவர்]

2) **திருமண உதவி:** விண்ணப்பத்தை பரிசீலித்து Rs. 500,- ஆண்டுதோறும் கொடுத்துவருகிறோம்.

B அரசாங்க தேர்வில் சிறப்புத் தகுதியுடன் வெற்றிபெறும் இரட்டை மாநகர நம் இன செல்வங்களுக்கு ஆண்டுதோறும் பரிசுவழங்குகிறோம்.

3) **இறைப்பணி:**
1) தமிழ் வருடப்பிறப்பு
2) சித்ரா பௌர்ணமி சுவாமி புறப்பாடுடன் செகந்திரா--பாத்தில் ஸ்ரீஸ்கந்தகிரி சுப்பிரமணிய தேவாலயத்தில் கொண்டாடுகிறோம். இக்கோயில் பெரியவாள் காஞ்சி காமகோடி அவர்கள் ஆலோசனையின் பேரில் சிறப்புடன் இயங்கிவருகிறது. ஆறுபடை வீடுகொண்ட அழகுமுருகனை இங்கு தரிசித்து அருள்பெறுகிறோம்.
3) ஸ்ரீகந்தர் சஷ்டி
4) பிள்ளையார் நோன்பு
5) முருகன் பூசை

ஆண்டுதோறும் சிறப்புடன் கொண்டாடி இறைவன் அருள்பெறுகிறோம்.

4) உல்லாசப்பயணம் ஒருமுறை ஆண்டுதோறும் ஏற்பாடு செய்து குழந்தைச் செல்வங்களை குதூகலப்படுத்துகிறோம்.

5) **கலைத்துறை இலக்கியப்பணி:** கந்தர்சஷ்டி சமயத்தில் கலைநிகழ்ச்சி நடத்தி வருகிறோம். குறிப்பாக திரு. மா. கண்ணப்பன், செல்வி சிகப்பி நாட்டிய

நிகழ்ச்சி நடத்தினோம். காசிஸ்ரீ அரு. சோ அவர்களின் காசி நடைப்பயண தெலுங்கு பதிப்பு இங்குள்ள கீஸ் ஹைஸ்கூலில் திரு பாபுரெட்டி I. A. S. அவர்கள்மூலம் வெளியிட்டுப் பெருமைகொண்டோம்.

விருந்தோம்பல் 1983, 1990 ஆண்டுகளில் இருமுறை காசிக்கு நடைப் பயணமாக சென்ற பக்தர்களை முன்னும் பின்னும் சிறப்பாக வரவேற்று அவர்கள் ஆசிபெற்றோம்.

உறுப்பினர்கள் எண்ணிக்கை: 50 புள்ளிகள். மொத்தம் ஆண், பெண் குழந்தைகள் - 120. வியாபாரத்துறையில் 50 விழுக்காடு, வேலை பார்ப்போர் 50 விழுக்காடு.

குறிப்பிடத்தக்க நகரப் பெருமக்கள்:

1) திரு. **A.** வள்ளியப்பன் I. A S.
(Chairman Srinpaneri Colmies)

2) திரு. **AR.** இராமசுவாமி செட்டியார்
(Chairman M/s. PENQUIN TEXTILES)

எதிர்கால எண்ணம்:

எங்களுடைய நோக்கம் எல்லாம் வட இந்தியாவையும், தென்இந்தியாவையும் இணைக்கும் இடமாக உள்ள இரட்டைமாநகரில் நமக்கென ஒரு நகர விடுதி இல்லையே என்ற ஏக்கம். முயற்சி திருவினையாக்கும் என்ற முதுமொழிக்கிணங்க பல முயற்சி செய்து வருகிறோம். ஸ்கந்தகிரி முருகன் கோயில் அருகில் செகந்தராபாத்தில் இடம் வாங்கி விடுதிகட்ட முயல்கிறோம். இந்தமுயற்சி ஈடேற பொற்கிழிக் கவிஞர் காசிஸ்ரீ அரு. சோ. அவர்கள் எங்களுக்கு உதவி செய்கிறார்கள். இம்முயற்சிக்கு நம் இனப்பெருமக்கள் அனைவரும் உதவி செய்யவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் சங்கத்தின்

தலைவர்:	திரு SP. ஆறுமுகம் செட்டியார்
செயலாளர்:	திரு அழ வேங்கடாசலம்
பொருளாளர்:	திரு அரு. அருணாசலம்

முருகன் பஜனைக்குழு:

தலைவர்:	திரு. M. முத்தய்யா செட்டியார்
செயலாளர்:	திரு. M. சோமசுந்தரம்
பொருளாளர்:	திரு. M. அழகப்பன்

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

AL. VENKATACHALAM
PLOT No. 220 B.
JAWAHAR NAGAR COLONY
Moulali,
HYDERABAD 5000 40.

திருச்செந்தூர்ப் பாதயாத்திரை

(இசைத்தொண்டர் - ந. காசிநாதன்)

''செட்டி கப்பலுக்குச் செந்தூரான் துணை'' என்ற பழமொழியின்படி செட்டிமக்கள் செந்தூரானை மறக்காமலிருந்து வந்திருக்கிறார்கள். இடையில் அதிகமாக செந்தூரை நினைக்காத, இக்காலத்தில் அதனை நினைவுபடுத்த ஒரு அற்புத நிகழ்ச்சி எங்களது அமைப்பாளர் பொற்கிழிகவிஞர் காசிஸ்ரீ அரு. சோ. அவர்களுக்கு நிகழ்ந்தது. 1971ஆம் ஆண்டில் சிவகாசிக்கு அருகில் உள்ள காக்கிவாடம்பட்டி என்னும் கிராமத்தில் உள்ள முருகன் அருள்பெற்ற திருமதி மகாலட்சுமி அம்மாள் என்னும் தாயை கவிஞர் அவர்கள் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. அப்பொழுது அந்த அம்மையார் ''செட்டியர்கள் செந்தூரை மறந்துவிட்டார்கள். செட்டி மக்கள் செந்தூரை மறக்காமல் கொண்டாடச் சொல்'' என்று கூறியிருக்கிறார்கள். அதிலிருந்து செந்தூருக்குப் பாதயாத்திரை சென்று வரவேண்டும். என்ற அவர் 1977ம் ஆண்டுதான் நிறைவேறியிருக்கிறது.

பொற்கிழி கவிஞர் அரு. சோ வும் திருத்தொண்டர் R. வயிரவன் அவர்களும் அமைப்பாளராக இருந்து இந்தப் பாதயாத்திரையை நடத்தி வருகிறார்கள். இந்த அமைப்பில் அடியேனும் ''இசைத்தொண்டர்'' இராம இலக்குமணனும், ''அருள்தொண்டர்'' கண. சந்திரசேகரும் இணைந்து பணியாற்றி வருகிறோம்.

3—5—1977ல சித்திரா பௌர்ணமி அன்று காலை 6 மணிக்கு காவடிச்சாமி திரு. S. ரகுநாதன் காவடி எடுக்க முதற்காவடி சிலம்பணி ஸ்ரீசிதம்பர விநாயகர் கோவிலில் இருந்து திருச்செந்தூருக்குப் புறப்பட்டது. உடன் 19 பேர்கள் பின் தொடர்ந்தார்கள். 11—5–77ல ஒன்பதாம் நாள் மாலை திருச்செந்தூர் அடைந்து 13—5–77ல பதினொன்றாம் நாள் காலை காவடியும் பாற்குடமும் செலுத்தப்பட்டது.

இரண்டாம் ஆண்டுமுதல் 11 நாட்களிருந்த பயணத்தை 8 நாட்களாக குறைத்து சித்திரா பௌர்ணமிக்கு காவடி செலுத்தி வருகிறோம். வருகிற சித்திரையில் தொடங்குவது பதினைந்தாம் ஆண்டு.

இந்த யாத்திரையில் புதுமை ஒன்றைப் புகுத்தியிருக்கிறோம். அதாவது யாத்திரையில் சிறப்பாகத் தொண்டாற்றுபவர்களுக்கு "அருள் தொண்டர்" என்றும், இசை பாடுபவர்களுக்கு ''இசைத் தொண்டர்" என்றும் 25 வருடம் ஏதாவது ஒரு படை வீட்டுக்குப் பாதயாத்திரை செய்தவர்களுக்கு ''திருமுருகன்" என்றும் கவுரவப் பட்டங்கள் எங்கள்

அமைப்பிலிருந்து வழங்கி வருகிறோம். அத்தோடு ஆறு படை வீடுகள் பாதயாத்திரை செய்திருப்பவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறோம்.

இதன்படி எனக்கு 1979ம் ஆண்டு ஆறுபடை வீடு பாதயாத்திரை செய்ததற்காக பொன்னாடையும் இசைத்தொண்டர் பட்டமும் கொடுத்து கவுரவித்தார்கள்.

ஆறுபடை வீடுகளிலும் கடுமையான பயணம் செந்தூர் செல்வதுதான். ஆறுபடை வீடுகளிலும் ஆண்டவனை அற்புதமாக காணக்கூடிய இடமும் திருச்செந்தூர்தான்.

முதல் நாள்	தேவகோட்டை	கோபாலபுரம்	காளையார் கோவில்
2ம் நாள்		கண்ணமங்கலம்	பரமக்குடி
3ம் நாள்		கீழத்தூவல்	முதுகுளத்தூர்
4ம் நாள்		கடலாடி	சாயல்குடி
5ம் நாள்		வேம்பார்	வைப்பார்
6ம் நாள்		வேப்பங்காடை	தூத்துக்குடி
7ம் நாள்		ஸ்பிக்நகர்	ஆத்தூர்
8ம் நாள்		திருச்செந்தூர்	

முதலில் 20 பேர் புறப்பட்ட இந்த யாத்திரையில் இப்பொழுது சுமார் ஆயிரம் பேர் பங்குகொள்கின்றனர். வழியெல்லாம் அன்பர்கள் மிக அருமையாக உபசரித்து உதவி செய்வது குறிப்பிடத்தக்கது.

சுவாமிமலை

KR. பழனியப்பன்

(தேவகோட்டை, கும்பகோணம் நகரத்தார் சங்கச் செயற்குழு உறுப்பினர்)

சோழவள நாட்டில் சோழ மாமன்னர்களுக்கு முடிசூட்டும் பேருபெற்று வாழ்ந்த நமது முன்னோர்கள் நாகபட்டினம் துறைமுகத்தில் கப்பலோட்டியும் அயல்நாடு சென்று வாணிபம் செய்து பொருளீட்டியும் அதன் வருமானத்தில் நமது தமிழகத்தில் பாடல்பெற்ற முக்கிய திவ்யக்ஷேத்திரங்களில் சிவாலயங்கள் கட்டி அதிலும் சோழநாட்டில் பெரும்பாலான கோயில்கள் புதிதாக நிர்மாணித்து, அன்னசத்திரங்கள், நகரவிடுதிகள், வேத பாடசாலைகள், தேவார பாடசாலைகள் நிர்மாணித்து தமிழகத்தில் நற்பெயர் பெற்ற சமூகம் நமது சமூகம் என்றால் அது மிகையாகாது.

சுவாமிமலையிலும் கானாடுகாத்தான் நகரத்தார்களில் சிவாலயமும் முருகன் ஆலயமும் நிர்மாணிக்கப்பெற்றன அதன்பின் நகரமடமும் திருநந்தவனமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சுவாமிநாத சுவாமிக்கு திருநந்தவனத்திலிருந்து சுமார் 80 வருட கா்லமாக சாயரக்ஷைக்கு மாலைகள் கொடுத்து வரப்படுகிறது. மேலும் பழனி நாட்டுக்கோட்டை நகரத்தார் அறக்கட்டளையின் சார்பில் தினமும் சாயரக்ஷை பூஜை நடைபெற்று வருகிறது.

நம் நகரமடத்தின் சார்பாக கும்பகோணம் நாட்டுக்கோட்டை நகரத்தார் அறக்கட்டளை கமிட்டியின் மேற்பார்வையில் சுவாமிநாத சுவாமிக்கு ஆனிமாதம் கிருத்திகைப் பெருவிழா மண்டகப்படி நடைபெற்று வருகிறது.

கும்பகோணம் வாழ் நகரத்தார் பெருமக்களால் வருடந்தோறும் ஆனிமாதம் கார்த்திகையன்று கும்பகோணமிருந்து மேளதாளத்துடன் பாற்குடம் எடுத்துக்கொண்டு பாதயாத்திரையாக சுவாமிமலை சென்று சுவாமிநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்பெற்று வருகிறது.

சுவாமிமலை நகரமடத்தில் ஒவ்வொரு மாதமும் கார்த்திகையன்று மடத்திலுள்ள முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்று 500 பேருக்கு மஹேஸ்வர பூஜை நடத்தி அன்னதானம் செய்யப் பெற்றுவருகிறது.


சுவாமிமலை நகரமடத்தில் ஒவ்வொரு மாதமும் விசாகநட்சத்திரத்தன்று மடத்திலுள்ள முருகப்பெருமானுக்கு சண்முகாரச்சனை செய்யப்பெற்று வருகிறது.

நகரமடத்தின் வருவாயிலிருந்து நமது பெண்களின் திருமணம் ஆறுக்கு ஒரு திருமணத்திற்கு ரூ 1000/- ஒருஆயிரம் ரூபாய் வீதம் கொடுக்கப்பெறுகிறது. மேலும் பிள்ளையார்பட்டியில் நடைபெறும் கூட்டுத் திருமணங்கட்கு திருமணம் ஒன்றிற்கு ரூ 200,- ரூபாய் இருநூறு வீதம் கொடுக்கப்பெறுகிறது.

புள்ளிருக்குவேளூர் எனப் போற்றப்பெறும் வைத்தீஸ்வரன்கோவில் அருள்மிகு வைத்தியநாத சுவாமியையும், முத்துக்குமார சுவாமியையும் பாதயாத்திரையாக வந்து தரிசிக்கவரும் பக்தர்களுக்கு விநாயகப் பெருமானுக்கு முக்கிய ஷேத்திரமாகிய திருவலஞ்சுழியில் காலைச் சிற்றுண்டி கொடுக்கப்பட்டு வருகிறது.

அருள்மிகு ஆதிகும்பேஸ்வரப் பெருமானின் மாசிமகப் பெருவிழாவில் மிகமுக்கியமானதும் பெருமை வாய்ந்ததுமாகிய ஐந்தாம் நாள் ரிஷபாருட தரிசனக்காட்சி நம் நகரத்தார் மண்டகப்படியாக ஐம்பதாண்டு காலமாக நடைபெற்றுவருகிறது.

கும்பகோணத்திலும் நகரவிடுதி வாங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெற்றுவருகிறது.



அருள்பொழியும் தெய்வங்கள்

("பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன்)

ஈரறுப தாண்டுக்கு முன்னே இந்த
எழில்மிக்க கழனிவாசல் பகுதி தன்னில்
வீரராம நாதபுர வேந்த ராலே
வெற்றிமுத்துப் பட்டணத்து மனைக ளுக்குத்
தீரமுடன் கவுல்வசூல் செய்வ தற்குத்
தெரிந்தகீழ மேலவீட்டார் உரிமை பெற்றார்
ஆரம்பம் ஆனமுத்துப் பட்ட ணத்தில்
அன்னைமீ னாட்சிக்குக் கோயில் தோன்ற

மீனாட்சி கோயிலினால் இந்த வட்டம்
"மீனாட்சி புர"மென்று பெயரைக் கொள்ளும்
மீனாட்சி அம்மைக்குப் பீடம் வைத்தார்
மேலான கலாமடத்துக் குருகை யாலே
மீனாட்சி பீடத்தின் கீழே அன்று
மேதக்க எந்திரமும் எழுதி வைத்தார்
மீனாட்சி பார்வையிலே முத்து மாரி
மேலான பொலிவோடு விளங்கக் கண்டோம்.

அன்னையவள் கோயிலுக்குக் குடநீ ராட்டு
ஆரம்பம் முதல்மூன்று முறைசெய் வித்தார்
பின்னையின்று பெருஞ்செலவில் நகரத் தார்கள்
பெருமைமிகு குடமுழுக்கு செய்விக் கின்றார்
தன்னிகரில் அன்னையவள் கொலுவி ருக்கத்
தமிழ்முருகன் வள்ளிதெய்வ யானையோடு
முன்னிற்கும் விநாயகர்க்கும் சிலைகள் வைத்தார்
முதல்குருவாம் தட்சணா மூர்த்தி வந்தார்.

வடகாசி விஸ்வநாதர் விசாலாட் சிக்கும்
வாஞ்சையுடன் பிரதிஷ்டை நடத்து கின்றார்
திடமான கல்யாண நவக்கிர கங்கள்
தெளிவுடைய பதம்நல்கும் சண்டி கேஸ்வரர்
நடமாடும் பக்தர்களின் பணியி னாலே
நலமான மீனாட்சி கோயி லுக்குள்
இடம்கொண்டு சிலையாகித் தெய்வ மாகி
இருக்கின்ற நேரத்தில் பாடு கின்றோம்.

அன்னையவள் மீனாட்சி பீட மாகி
அருஉருவக் கோலத்தில் காட்சி தந்து
கண்ணை இமை காப்பதுபோல் காப்ப தாலே
கல்வியுடன் தொழிலோடு செல்வம் இந்த
மண்ணினிலே நாள்தோறும் வளரக் கண்டோம்
மண்ணெல்லாம் பொன்னாக மலரக் கண்டோம்
அன்னையவள் எழுந்தருள ஐம்பொன் கோலம்
அருள்பொழியும் உற்சவராய் இன்று வந்தாள்.

எத்தனையோ லட்சங்கள் செலவு செய்தே
இங்குள்ள நகரத்தார் ஒன்றாய் நின்று
புத்தமுதாம் மீனாட்சி கோயி லுக்குப்
புனிதமிகு குடமுழுக்குச் செய்விக் கின்றார்
வித்தார மாய்இங்கே மண்ட பங்கள்
விமானங்கள் புதிதாக அமைத்துள் ளார்கள்
முத்தான தமிழ்மறைகள் முழங்க ஓர்பால்
முதியநால் வேதங்கள் மற்றும் ஓர்பால்

அக்கினியின் குண்டத்துப் புகைகள் ஓர்பால்
யாகசாலைக் காய்கறிகள் அழகும் ஓர்பால்
பக்கமிரு வாத்தியங்கள்; தீபக் கால்கள்!
பண்புடைய நகரத்தார் பவ்யம் ஓர்பால்
தக்கபல தொழிலாளர் தொண்டும் ஓர்பால்
தன்னிகரில் தமிழுக்கும் மேடை ஓர்பால்
முக்கியமாய்க் கவிபாடும் கவிஞர் ஓர்பால்
முத்தமிழாய் மீனாட்சி பொலிந்து நின்றாள்.

வண்ணமிகு யாகசாலைக் கூடத் திற்தள்
வடிவழகி மீனாட்சி கொலுவி ருக்கும்
கண்கொள்ளாக் காட்சியினைப் பார்க்க வேண்டும்
கற்பாந்த காலத்துக் கூர்மா சனத்தில்
மண்ணாளும் ஆற்றல்மிகு நாகா சனத்தில்
மதிப்புடனே மாண்புமிகு சிம்மா சனத்தில்
விண்ணாளும் அட்டாங்க யோகா சனத்தில்
வீற்றுள்ளாள் மீனாட்சி பத்மா சனத்தில்!

அத்தகைய மீனாட்சி கொலுவைச் சுற்றி
அக்கினியின் குண்டங்கள் ஒன்ப துக்கும்
சித்தருடன் முனிவர்கள் தேவர் எல்லாம்
ஜெகஜோதி யாய்வந்து சிறப்புச் செய்யப்
பக்தர்களின் சேவையிலே கனிந்த அன்னை
பழமதுரை நகர்விட்டு இங்கே வந்தாள்!
பக்தர்களே! உங்கட்கென் வணக்கம் கோடி!
பல்லாண்டு பல்லாண்டு பாடு கின்றேன்.

சிறப்புடனே குடமுழுக்குச் செய்விக் கின்ற
செயலாற்றல் மிக்குடைய குழுவி னர்க்கும்
பொறுப்புடனே பணியாற்றும் இளைஞர் கட்கும்
பொன்னான தாய்மார்க்கும் பெரியோர் கட்கும்
விருப்புடனே தொண்டாற்றும் தொழிலா ளர்க்கும்
வேதவித்து, ஓதுவார்கள், அவையோ ருக்கும்
உருக்கமுடன் வணக்கங்கள் நன்றி சொன்னேன்
உயர்கவிதை அரங்கம்இனித் தொடரும் இங்கே

எல்லோரும் அமைதியுடன் கேட்க வேண்டும்
இனிமைமிகும் இடங்களிலே கைகள் தட்டி
வல்லாங்கு பாராட்டி ரசிக்க வேண்டும்.
வற்றாத கவிஇங்கே பொங்கக் காண்பீர்.
வெல்லம்போல் கவிபாடும் கவிஞர் இங்கே
விண்ணிருந்து மண்ணிற்குத் தெய்வ மெல்லாம்
நல்லவிதம் கொணர்கின்றார் பக்தி யோடு
நாம்தெய்வக் காட்சிகளைக் காண்போம் வாரீர்.

(கும்பாபிஷேகக் கவியரங்கிற்குத் தலைமைதாங்கி 24—3—1991 மாலையில் பாடியது)

காயத்ரீ மந்திரங்கள்

1 கணேச காயத்ரீ: ஏகதந்தாய வித்மஹே வக்ரதுண்டாயதீமஹி
தன்னோ தந்தீப்ரசோதயாத் ||

ஒரே தந்தத்தை உடையவரை வளைந்த துதிக்கைகொண்டவரை தியானம் செய்கிறோம். அந்த யானைமுகக் கணபதி நம்மைத் தூண்டட்டும்.

2 ருத்ர காயத்ரீ: தத்புருஷாய வித்மஹே மஹாதேவாயதீமஹி
தன்னோருத்ர: ப்ரசோதயாத்

அந்தப் பரம புருஷனை அறிகிறோம், மகாதேவனை தியானிக்கிறோம். அந்த ருத்திரன் நம்மைத் தூண்டட்டும்.

3 சிவகாயத்ரீ: தனமஹேசாய வித்மஹேவாக்வி சுத்தாயதீமஹி
தன்னசிவ: ப்ரசோதயாத்.

அந்தப் பெருந்தலைவனை அறிகிறோம், தூயசொற்களை உடையவனை தியானிக்கிறோம். அந்தசிவன் நம்மைத் தூண்டட்டும்.

4 துர்க்கா காயத்ரீ: காத்யாயன்யை வித்மஹேகன் யாகுமார்யைதீமஹி
தன்னோதுர்கா ப்ரசோதயாத்

காத்யாயனரின் மகளை அறிகிறோம், கன்னியைக், குமரியை தியானிக்கிறோம். அந்த துர்க்கை நம்மைத் தூண்டட்டும்.

5 ஸ்கந்த காயத்ரீ: ததபுருஷாய வித்மஹே மஹாசேனாயதீமஹி
தன்ன: ஷண்முக: ப்ரசோதயாத்.

அந்தப் பரம புருஷனை அறிகிறோம், பெரும்படை உடையவனை தியானிக்கிறோம், அந்த ஆறுமுகன் நம்மைத் தூண்டட்டும்.

6 பிரம்ம காயத்ரீ: வேதாத்மனாய வித்மஹே ஹிரண்யகர்ப்பாயதீமஹி
தன்னோ ப்ரம்மா ப்ரசோதயாத்

வேதவடிவானவனை அறிகிறோம், இரணியகர்ப்பனை தியானிக்கிறோம் அந்த பிரம்மதேவன் நம்மைத் தூண்டட்டும்.

7 விஷ்ணு காயத்ரீ: நாராயணாய வித்மஹே வாசுதேவாயதீமஹி
தன்னோ விஷ்ணு: ப்ரசோதயாத்.

நாராயணனை அறிகிறோம், வாசுதேவனை தியானிக்கிறோம். அந்த விஷ்ணு நம்மைத் தூண்டட்டும்.

8 மஹாலக்ஷ்மீச வித்மஹே விஷ்ணுபத்னீசதீமஹி
தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத்

மகாலக்ஷ்மியை அறிகிறோம், விஷ்ணுவின் மனைவியை தியானிக்கிறோம் அந்த லக்ஷ்மீ நம்மைத் தூண்டட்டும்.

9 நரசிம்ம காயத்ரீ: வஜ்ரநகாய வித்மஹே தீக்ஷணதம்ஷ்ட்ராயதீமஹி
தன்னோ நாரசிம்ஹ: ப்ரசோதயாத்.

வைரம்போன்ற உறுதியான நகம் உடையவனை அறிகிறோம், கூரிய பற்களை உடையவனை தியானிக்கிறோம் அந்த நரசிம்மன் நம்மைத் தூண்டட்டும்.

10 சூர்ய காயத்ரீ: பாஸ்கராய வித்மஹே மஹத்த்யுதிகராயதீமஹி
தன்னோ ஆதித்ய: ப்ரசோதயாத்.

ஒளி கொடுப்பவனை அறிகிறோம், பேரொளிப் பொருளை தியானிக்--கிறோம் அந்த அதிதியின் மைந்தன் நம்மைத் தூண்டட்டும்.

11 தத்புருஷாய வித்மஹே சக்ரதுண்டாயதீமஹி
தன்னோ நந்தீ ப்ரசோதயாத்

அந்தப் பரமபுருஷனை அறிகிறோம், வளைந்த கொம்புகளை உடையவனை தியானிக்கிறோம். அந்த நந்தி நம்மைத் தூண்டட்டும்.

12 அக்னி காயத்ரீ: வைச்வானராய வித்மஹே பாலீலாயதீமஹி
தன்னோ அக்னி: ப்ரசோதயாத்

வைச்வானரனை அறிகிறோம். ஒளியுடன் விளையாடுபவனை அறிகிறோம். அந்த அக்னி நம்மைத் தூண்டட்டும்.

13 கருட காயத்ரீ: தத்புருஷாய வித்மஹே சுவர்ணபக்ஷாயதீமஹி
தன்னோ கருட: ப்ரசோதயாத்.

அந்தப் பரம்புருஷனை அறிகிறோம், தங்கச்சிறகுகளை உடையவரை தியானிக்கிறோம். அந்த கருடன் நம்மைத் தூண்டட்டும்.

14 சக்தி காயத்ரீ: சர்வமோஹின்யைச வித்மஹே விஸ்வஜனன்யைசதீமஹி
தன்ன: சக்தி: ப்ரசோதயாத்.

எல்லோரையும் மயங்கச் செய்பவளை அறிகிறோம், எல்லாவற்றையும் உண்டாக்குபவளை தியானிக்கிறோம். அந்த சக்தி நம்மைத் தூண்டட்டும்

15 ஹயக்ரீவர் காயத்ரீ: வாகீர்வராய வித்மஹே ஹயக்ரீவாயதீமஹி
தன்னோ ஹம்ஸ: ப்ரசோதயாத்.

சொல்லின் தலைவனை அறிகிறோம். குதிரை முகனைத் தியானம் செய்கிறோம். அந்த அன்னம் நம்மைத் தூண்டட்டும்.

கலாமடம் பாதரக்குடி ஆதீனகர்த்தர்

தவத்திரு இரவீந்திரசுவாமிகள்

முத்துப்பட்டணம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் சரித்திரம்

("பொற்கிழிக் கவிஞர்" "காசிஸ்ரீ" அரு. சோமசுந்தரன்)

இராமநாதபுரம் அரசர் அவர்கள் கி. பி. 1710ஆம் ஆண்டு கழனிவாசல் கிராமம் முழுவதையும் பூதானமாக முழு உரிமையோடு அந்தணர்களுக்கு சாசனம் செய்து கொடுத்தார்கள். கழனி என்றால் வயல் என்று பொருள். 'வயல்களின் முற்றமாக' இப்பகுதி இருந்ததால் இது "கழனிவாசல்" என்ற வளமான பெயரைப் பெற்றிருக்கிறது. அதலைப்பேட்டைக் கண்மாய் இப்பகுதியின் வளத்துக்கு ஒரு காரணமாகும்.

கழனிவாசல் கிராமத்தில் 42 குருக்கம் அளவுகொண்ட பெரிய நிலப்பகுதியை இருவார வரிவசூல் செய்யும் (கவுல்) அதிகாரத்தை 4—9—1870 அன்று பதிவு செய்யப்படாத ஒரு பத்திரத்தின்மூலம் நகரத்தார் இருவர் பெற்றனர். 1 முத்துராமன் செட்டியார் & அவருடைய சகோதரர் வெங்கடாசலம் செட்டியார் 2. இராமநாதன் செட்டியார். முத்துராமன் செட்டியாரின் கிளை "மேல வீடு" என்றும், வெங்கடாசலம் செட்டியாரின் கிளை "கீழவீடு" என்றும் அன்றுமுதல் அழைக்கப்படுகிறது. (இதுபற்றிய விபரம் தேவகோட்டை D. M. Court O. S. No. 251 of 1966 — 5—12—1969 தீர்ப்பு தஸ்தாவேஜில் தெளிவாக உள்ளது.)

கழனிவாசல் கிராமம் முதலில் இராமநாதபுரம் அரசர்க்குச் சொந்தமாக இருந்து பிறகு அந்தணர்க்கு பூமிதான உரிமை உடையதாக மாறி, சிவகங்கை ஜமீனுக்கும், கோயிலூர் ஆதீனத்துக்கும் ஒரு பகுதி உரிமை உடையதாக மாற்றம்பெற்று, பிறகு வீட்டுமனைகள் பிரிக்கப்பெற்று நகரத்தார்கள் குடியேறியதும் "கழனிவாசல் முத்துப்பட்டணம்" என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. முத்துப்பட்டணம் நகரம் உருவான காலம் கி. பி. 1870 என்று தெரிகிறது. வடக்கு தெற்கில் நான்கு வீதிகளும், கிழக்கு மேற்கில் நான்கு வீதிகளும் கொண்ட அழகான ஒரு சிறு கிராமமாக இது அமைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வீட்டு மனையும் 600 குழிகள் கொண்டதாகப் பிரிக்கப் பெற்றுள்ளது.

காரைக்குடி தனி ஊராக இருந்த காலத்தில் முத்துப்பட்டணம், செக்காலை முதலிய நகரத்தார் ஊர்கள் அருகருகே தோன்றலாயின. முத்துப்பட்டணம் உருவான போது முதலில் காரைக்குடி நகரத்தார்களும், தொடர்ந்து பல ஊர் நகரத்தார்களும் வீட்டு மனைவாங்கி முத்துப்பட்டணத்தில் குடியேறி இருக்கின்றனர். இன்று காரைக்குடி, முத்துப்பட்டணம், செக்காலை மூன்று ஊர்களும் ஒன்றாகி இருப்பது காலத்தின் வளர்ச்சியாகும்.

முத்துப்பட்டணம் நகரத்தின் வடகீழ் மூலையில் ஸ்ரீமீனாட்சி அம்மன் கோயிலை கி. பி. 1870ஆம் ஆண்டுவாக்கில் நகரத்தார்கள் உருவாக்கி இருக்கின்றனர். அதே காலத்தில்தான் காரைக்குடி நகரச் சிவாலயம், நாகநாதபுரம் சிவாலயம், விஷ்ணு கோயில் ஆகியன சற்றுமுன்னதாக உருவாகி இருக்கின்றன.

காரைக்குடி நகரச்சிவன் கோவில் மிகப்பெரியதாகவும், இராஜகோபுரம் கொண்டதாகவும், பத்துநாள் திருவிழா கொண்டாடப்படுவதாகவும் அமைந்ததால் முத்துப்பட்டணம் நகரத்தார்கள் காரைக்குடி நகர மீனாட்சிசுந்தரேஸ்வரர் கோயில் திருவிழாவில் பங்குபெறுவதற்காகவும், அதன் முக்கியத்துவத்தைக் குறைக்காமல்

இருப்பதற்காகவும் முத்துப்பட்டணம் ஸ்ரீமீனாட்சி அம்மன் கோயிலை எளிய முறையில் அம்மன் பீடத்தோடு அமைத்து வழிபட்டனர். இங்கு இராஜகோபுரம் இல்லை; எந்தத் தெய்வச்சிலையும் இல்லை; திருவிழா இல்லை. வழிபாடும் மிகச் சுருக்கமாகவே இருந்தது. மீனாட்சி அம்மன் கோவில் அமைந்த பகுதி "மீனாட்சிபுரம்" என்ற பெயரைப்பெற்றது.

மீனாட்சி அம்மன் கோவில் கட்டப்பெற்ற சமயத்தில், அதாவது 19ஆம் நூற்றாண்டில் முதல் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கிறது. அப்பொழுது ஸ்ரீமீனாட்சி அம்மன் பீடத்தில் பதிப்பதற்கான எந்திரத்தை எழுதிப் பூஜைசெய்து வழங்கியவர்கள் நகரத்தார் ஆண்கள் குருபீடத் தலைவரான கலாமடம் பாதரக்குடி ஆதீன மூன்றாவது பட்டமான தவத்திரு இராமசாமி தேசிக சுவாமிகள் ஆவார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடமுழுக்கும், அதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடமுழுக்கும் நிகழ்ந்திருக்கின்றன. இப்பொழுது இந்த நூற்றாண்டில் மூன்றாவது குடமுழுக்கு விழா சிறப்பாக நிகழ்ந்திருக்கிறது. பல இலட்சம் ரூபாய் செலவில் கோயில் விமானமும், கன்னிமூலை விநாயகர் விமானமும் புதுப்பிக்கப்பெற்று, காசிவிஸ்வநாதர், விசாலாட்சி, தட்சணாமூர்த்தி சண்டிகேஸ்வரர், சுப்பிரமணியர், வள்ளிதெய்வானை, தேவியருடன் கூடிய நவக்கிரக-மூர்த்திகள் கல்யாணகோல நவக்கிரகம், விமானம், மண்டபம் முதலியன புதிதாக அமைத்து ஸ்ரீமீனாட்சி அம்மன் உற்சவமூர்த்தியும் புதிதாக அமைத்து, வெளிமண்டபம், மகாமண்டபம் திருத்தி அமைத்து மிகச்சிறப்பான முறையில் பிரமோதூத ஆண்டு பங்குனித்திங்கள் 11ஆம் நாள் (25—3—1991) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

22—3—91 காலை 12 மணிக்கு அனுக்ஞை, விக்னேஸ்வரபூசை, தனபூசை நடைபெற்றன. இரவு 7-30 மணிக்கு கடஸ்தாபனம் செய்து முதல்யாகசாலை பூசை நடைபெற்றது. 23—3—91 காலை மாலை, & 24—3—91 காலை மாலை & 25—3—91 காலை யாகசாலை பூசைகள் நடைபெற்றன. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் கோயிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞானதேசிகசுவாமிகள், நகரத்தார் ஆண்கள் குருவாகிய கலாமடம் பாதரக்குடி ஆதீனகர்த்தர் தவத்திரு இரவீந்திரசுவாமிகள், நகரத்தார் பெண்கள் குருவாகிய துலாவூர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் பீடத்தலைவர் சிவத்திரு ஞானப்பிரகாச தேசிகசுவாமிகள் ஆகியோர் எழுந்தருளி வாழ்த்தினர்.

கும்பாபிஷேகத்தை ஒட்டி ஆன்மீக நிகழ்ச்சியினை 23—3—91 மாலை திரு மு. மெ. முத்துராமன் செட்டியார் தலைமையில், திரு. சித. சிதம்பரம் (Ex. M L A) அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தேவகோட்டை ஜமீன்தார் திரு. சோம. நாராயணன் செட்டியார் வாழ்த்துரை வழங்க பேராசிரியர் திரு வெ. சு. அழகப்பன் "பட்டினத்தார்" பற்றி உரையாற்றினார்.

24—3—91 மாலையில் அடியேன் தலைமையில் "அருள்பொழியும் தெய்வங்கள்" என்ற தலைப்பில் "விநாயகர்" பற்றி புலவர் இராம வீரப்பன், "முருகன் வள்ளி தெய்வானை" பற்றி டாக்டர் சவகர்லால் "மீனாட்சி அம்மன்" பற்றி கவிஞர் நா. மீனவன், காசிவிஸ்வநாதர் விசாலாட்சி பற்றி முதல்வர் தெ. முருகசாமி, தட்சணாமூர்த்தி பற்றி கவிஞர் கா. நாகப்பன், சண்டிகேஸ்வரர் பற்றி கவிஞர் அரு. சுந்தரம் ஆகியோர் கவிபாடினர்.

25—3—91 காலை 10 மணிக்கு "சிவத்தொண்டில் விஞ்சி நிற்கும் தொண்டு புரிந்தவர் பட்டினத்தாரா? காரைக்கால் அம்மையாரா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம்

நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சிக்குப் புலவர் மாமணி மா. முத்துராமன் நடுவராக இருந்தார். "பட்டினத்தாரே" என்ற தலைப்பில் டாக்டர் கரு. முத்தையா, கவிஞர் சேது அருணசலம் ஆகியோரும், "காரைக்கால் அம்மையாரே" என்ற தலைப்பில் டாக்டர் பழ. முத்தப்பன், பேராசிரியர் நா. சுப்பிரமணியன் ஆகியோரும் வாதிட்டனர்.

மாலையில் பக்திப்பாடலும், இரவில் சுப்பு ஆறுமுகம் அவர்களின் வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. அம்மன் உற்சவ மூர்த்தி ஊர்வலமும் நடைபெற்றது. எல்லா நிகழ்ச்சிகளிலும் மக்கள் திரண்டிருந்து பங்குபெற்றனர்.

ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயில் வளாகத்தில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வந்தமர்ந்த அந்தணர்குலக் கன்னிப்பெண் அம்மையில் குளிர்ந்து அருகில் முத்துமாரியாகக் கோயில்கொண்டு ஸ்ரீமீனாட்சி அம்மனின் பார்வையில் எழுந்தருளியிருப்பது ஒருபெரும் சிறப்பாகும்.

இன்றுள்ள கோயிலூர் முன்பு கழனிவாசலைச் சேர்ந்ததாகும். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு காரைக்குடியில் பிறந்த ஸ்ரீ முத்துராமலிங்க ஆண்டவர் அவர்கள் கோயிலூரை உருவாக்கி மடம் நிறுவினார்கள். அதுபற்றிக் கல்லல் பழநியப்ப ஐயா அவர்களின் பழம்பாடல் நினைவுகூரத்தக்கதாகும்.

"மடம் உண்டோ? சிவாலயங்கள் மிகுதி உண்டோ?
வாசிட்டம் படிப்பதுண்டோ? மனத்துள் ஞானத்
திடம் உண்டோ? நால்வர்தமிழ் படிப்பாருண்டோ?
திவ்யமாம் உதாரமுதற் குணங்கள் உண்டோ?
விடம் உண்டோன் அடியார் குழாம் மிகுதி உண்டோ?
மெய்யறம் சத்திரம் விரைப்பூங்காவும் உண்டோ!
வடகயிலைக்கு இறைவன் எனும் முத்துராம
வள்ளல்திருக் கழனிநகர் வாராமுன்னம்?"

காரைக்குடியில் பிறந்த முத்துராமலிங்க ஆண்டவர் அவர்கள் கழனிவாசலைச் சேர்ந்த கோயிலூரை உருவாக்கி மடம் அமைத்த பிறகுதான் நகரத்தார்கள் கோயில் கட்டுவது, மடம் அமைப்பது, நந்தவனம் உருவாக்குவது, தேவாரம் திருவாசகம் படிப்பது, சத்திரம் வைப்பது முதலிய தரும காரியங்களில் ஈடுபட்டனர். அதன் விளைவுதான் காரைக்குடி சிவன் கோயில், நாகநாதபுரம் கோயில், முத்துப்பட்டணம் மீனாட்சி அம்மன் கோயில் முதலிய திருப்பணிகள் ஆகும்.

இப்பொழுது ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோயிலில் பலகால பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தேவார இசை முழங்குகிறது. கலாமடம் பாதரக்குடி சுவாமிகளின் அரும்பணியினால் சண்டிஹோமம் நடைபெறுகிறது. தினந்தோறும் மக்கள் திரளாக வந்து வழிபடுகின்றனர். கோயில் லட்சுமிகரமாகப் பொலிவுபெற்றுத் திகழ்கிறது. இக்கோயிலை வழிபட வழிபட சாந்நித்தியம் மிகுந்து எல்லாப் பேறுகளும், செல்வங்களும் மிகுவது உறுதி.

அவளும் அவலும்

பேராசிரியர்: **அய்க்கண்**

மாணிக்கம், காம்போசிஷன் நோட்டுக்களைத் திருத்திக்கொண்டிருந்தபோது, எதிரே பூரணி வந்து நின்றாள்.

"என்னங்க, நம்ம சத்யாவுக்கு வயசு பதினெட்டு நடக்கிறதுங்கிறது ஞாபகம் இருக்கா இல்லியா?"

"ஏன்டி அப்படிக் கேக்கிறே? நான் இன்னும் உங்களையெல்றாம் மறந்திட்டு சாமியாராய்ப்போயிடலே. ஏன்? என்ன விஷயம்?" – கையிலே இருந்த சிவப்புப் பென்சிலைக் கீழே வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் மாணிக்கம்.

"அவளுக்கும் பதினெட்டு வயசாயிடுச்சே, காலா காலத்திலே அவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணுங்கற கடமை, ஞாபகம் இருக்கா இல்லியானு கேட்டேன்." அவளுடைய குரலின் கடுமை இன்னும் குறையவில்லை.

"ஏன்டி, அதுக்குள்ளே என்ன அவசரம்?.... உனக்குக் கல்யாணம் எப்போ ஆச்சு? இருபத்திரண்டு வயதிலேதானே?" – பிரச்னையின் சூட்டைச் சிறிது தணிப்பதற்காக, கேலியாகச் சிரித்துக்கொண்டு கேட்டார்.

"நான் நாட்டுப் புறம்; இருபத்திரண்டு என்ன, முப்பத்திரண்டு வயசுவரை கூட, வீட்டுக்குள்ளாற இருப்பேன். ஆனா இது நாட்டுப்புறம் இல்லே; கண்ட கதைகளையும் சினிமாக்களையும் பார்த்திட்டு, பட்டணத்துப் பிள்ளைகள் பிஞ்சிலே பழுத்திடுதுகளே!"

"ஊரிலே இருக்கிறதைப் பத்தி உனக்கென்ன? நம்ம மகள் அப்படிப் பட்டவளா என்ன?" என்று அவர் பெருமிதமாகக் கேட்டார்.

"அது சரி, இப்பவே மூத்ததுக்குக் கல்யாணம் பண்ணி முடிச்சால்தானே அடுத்தடுத்து இருக்கிற நாலு பொண்களுக்கும் வழி பண்றதுக்கு நம்ம ஆயுசு சரியாயிருக்கும்?..... சத்யாவுக்குக் கல்யாணம் பண்றதுன்னா வரதட்சிணை, சீர் செனத்தினு பத்தாயிரத்துக்கும் மேலே செலவாகுமே? அதுக்கு என்ன செய்யப் போறீங்க" என்று ஆத்திரமாகக் கேட்டாள் பூரணி.

"வரதட்சிணையெல்லாம் நம்மாலே கொடுத்துக் கட்டுப்படியாகுமா?"

"வரதட்சிணை இல்லேன்னா, நல்ல சம்பந்தம் எப்படி அமையும்?"

"நல்ல சம்பந்தம்னா என்னடி? பணத்தைச் சொல்றியா? குணத்தைச் சொல்றியா?.... உன் அகராதிப்படி நல்ல சம்பந்தம்னா ஒரு டாக்டர், ஒரு எஞ்சினியர், ஒரு ஆபீஸ் மானேஜர், அல்லது பாங்க் கிளார்க், அட்லீஸ்ட் ஒரு கவர்ன்மென்ட் ஆபீஸ் குமாஸ்தா – அப்படித்தானே? இப்படியெல்லாம் சம்பந்தம் பண்ணணும்னு நெனைச்சா நெறைய வரதட்சிணை கொடுக்கத்தான் வேண்டும். ஆனா, குணத்தைப் பார்த்து, நல்லவன்னு தெரிஞ்சா ஒரு ஹோட்டல் சர்வருக்குக் கூட என் பொண்ணைக் கொடுக்க நான் தயார்....."

"ஹோட்டல் சர்வருக்கா?" என்று திகைத்துப் போனாள் தாய்.

"ஏன், அவன் மனுஷனில்லையா? நல்ல குணம்தானடி முக்கியம். இன்னைக்கு சர்வராயிருக்கிறவன் நல்லா உழைச்சு முன்னேறி, நாளைக்கு ஒரு முதலாளியாயி- -டலாம். ஒவ்வொரு அம்மாவும் உன் மாதிரி, தன்னைவிட உயர்ந்த இடமாய்

சம்பந்தம் பண்ண ஆசைப்படாம, தகுந்த இடமாய்ப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க முன்வந்தால், வரதட்சிணே பழக்கமே ஒழிஞ்சு போய்விடும்....''

அவருடைய உபதேசம், அவள் காதுக்குள் நுழைய முடியாமல், வெளியே காற்றிலே தஞ்சம் புகுந்தது.

''ஆமா.... ஊருக்கு உபதேசம் பண்றதே உமக்கு வேலேயாய்ப் போச்சு.... சத்யா கல்யாணத்தைப் பத்தி சீக்கிரமாய் ஒரு முடிவுக்கு வாங்க'' என்று அழுத்தமாகச் சொன்னுள் பூரணி.

''அடி மண்டு, கல்யாணம்கிறது நாமாக முடிவு செய்றதில்லே. அது மேலே ஆண்டவனுப் பார்த்து முடிவு செய்கிற விஷயம்.....''

''ஆரம்பிச்சிட்டீங்களா உங்க புராணத்தை?.... எல்லாம் அவன் செயல், எல்லாம் அவன் செயல்னு இதையும் கடவுள்கிட்டே விட்டுட்டீங்களா?...''

''ஆமாடி.... கல்லுக்குள் தேரைக்கும், கருப்பையுள் உயிருக்கும், கருணே செய்கிற கடவுள் உன் மகளுக்கு வழி காட்டாமல் போய் விடுவாஞ?''

''அதனுலே, அவரையே நம்பிக்கிட்டு நாம் சுட்டு விரலேக்கூட அசைக்காம இருந்தா காரியம் நடக்குமா?''

''நடக்கும்டி... எல்லாத்தையும் அவன் பார்த்துப்பான்கிற நம்பிக்கையோட அவனேச் சரணுகதி அடைஞ்சிடணும். நான் செய்வேன், நான் முடிப்பேன் என்று சொல்கிற 'நான்' என்ற அகந்தை ஒழியணும்.''

''தத்துவமெல்லாம் அப்புறம் சொல்லலாம். முதல்லே வீட்டிலே துளி பருப்பு கிடையாது; காப்பிப்பொடி மருந்துக்குக்கூட இல்லே.'' சொல்லிவிட்டு உள்ளே திரும்பி வந்தாள் பூரணி.

உள்ளே – அடுப்படி வாசலிலே நின்றுகொண்டிருந்தாள் சத்யா! ''எல்லாம் கேட்டுக்கிட்டிருந்தேம்மா!.,.. நான் இனிமே படிக்கப் போறதில்லே. ஏதாவது வேலே பார்க்கப் போறேன்.''

''ஏன்டி, படிப்பைப் பாதியிலே விட்டுட்டா?'' – திகைத்துத் தடுமாறினுள் தாய்.

''இந்த பி. எஸ்ஸி. முடிய இன்னும் ரெண்டு வருஷமாயிடும். அதுக்கப்புறம் வேலே கிடைக்க நாளாகும். அதுவரை நம்ம குடும்பத்துக்கு அப்பா சம்பாதிச்சா மட்டும் போதாது. தம்பி தங்கைகளேயாவது நல்லா படிக்க வைக்கணும்.....

''அதுக்காக, நீ சம்பாதிச்சா, இந்தக் குடும்பம் நடக்கணும்?''

''நானே ஒரு பையனுப் பிறந்திருந்தா இப்படிக் கேப்பியா? அம்மா! நான் ஒரு பொண்ணு என்கிறதை மறந்திடு. மூத்த மகளான நான் இந்தக் குடும்பத்துக்கு என்னுலே ஆன கடமையைச் செய்யப் போறேன்.''

அதற்குள், ''அம்மா.... அம்மா! சாதம் போடு....'' என்று பிள்ளேகள் கூட்டம் உள்ளே ஒடிவந்தது! பூரணி குழந்தைகளேக் கவனிக்க உள்ளே சென்றுள்.

மவுண்ட் ரோட்டில் இருந்த ஒரு கம்பெனி கூப்பிட்டிருந்த 'இண்டர்வியூ'வுக் –காகப் புறப்பட்டு, பஸ் ஸ்டாப்பில் நின்றுகொண்டிருந்தாள் சத்யா.

காலே நேரத்து 'பீக் அவர்'. பள்ளி, கல்லூரி அலுவலகங்களுக்குப் போகிறவர்களின் கூட்டம். கார்களும், டாக்சிகளும், ஆட்டோக்களும் அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தன.

திடீரென்று எதிர் ஓரத்தில், "ஐயோ!" என்ற கூக்குரல்.

பிளாட்பாரத்திலிருந்து இறங்கி, குறுக்கே நடந்த வயதான கிழவி ஒருத்தியை மோதிக் கீழே தள்ளிவிட்டுப் புயலாக ஓடி மறைந்து விட்டது ஒரு கார். அதன் நம்பரைக்கூடச் சரியாகப் பார்க்க முடியாத அளவுக்கு அதிலே தூசி.

சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த அம்மாள் பாதை ஓரத்தில் "ஐயோ! அம்மா!... கடவுளே!"... என்று வலி பொறுக்காமல் அலறிக்கொண்டே எழுந்திருக்க முடியாமல் கிடந்தாள். காலிலே பலத்த அடியுடன் ரத்தமும் சிந்திப் பரவிக்கொண்டிருந்தது.

அங்கே நின்றுகொண்டிருந்த யாருமே, அந்த அம்மாளுக்கு உதவி செய்யப் போகவில்லை.

ஆக்ஸிடெண்டுக்கு ஆளான அந்த அம்மாளுக்கு உதவப் போனல் ஆஸ்பத்திரி, போலீஸ், கோர்ட், சாட்சி என்று அலையவேண்டுமே!... ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு வேலை; தலைபோகிற அவசரம்!...

விபத்தையே பார்க்காதவர்கள்போல் ஒவ்வொருவரும் வெவ்வேறு திசைகளைப் பார்த்துக்கொண்டும், கையிலிருந்த பத்திரிகை, கதைப் புத்தகங்களால் முகத்தை மறைத்துக்கொண்டும் நின்று கொண்டிருந்தார்கள்!

சத்யாவால் அப்படி நிற்கமுடியவில்லை. உடனே பதற்றத்துடன் அந்த அம்மாளிடம் ஓடினுள்.

"என்னம்மா, எங்கே அடி?" என்று பரிவுடன் கேட்டு அவளைத் தூக்கி நிறுத்த முயற்சி செய்தாள் சத்யா.

"இங்கே... இங்கே... கால் எழுந்திருக்க முடியலேம்மா!... இடுப்பிலேயும் வலிக்குது... அம்மா தாயே!... என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயேன்" என்று கெஞ்சிய அம்மாள் சிந்திக்கிடந்த ரத்தத்தைப் பார்த்ததாலோ என்னவோ, திடீரென்று மயக்கமாகிவிட்டாள்.

அவளைப் படுக்க வைத்துவிட்டு எழுந்தாள் சத்யா.

ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டுபோக டாக்ஸியோ ஆட்டோவோ வேண்டுமே? பணம்?

இண்டர்வியூவில் நேரமாகிவிட்டால், மத்தியானம் சாப்பிட என்று அம்மா கொடுத்த இரண்டு ரூபாய் இருந்தது அவளிடம்.

அந்தப் பரபரப்பான நேரத்திலே குதிரைக் கொம்பாய்க் கிடைத்த ஒரு ஆட்டோவைப் பிடித்து அந்த அம்மாளை ஏற்றி ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தாள் சத்யா.

அவசர வார்டிலே ஒரு நர்ஸிடம் நடந்த நிகழ்ச்சியையும் தன் இண்டர்வியூ அவசரத்தையும் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். ஆட்டோ டிரைவரிடம் வந்து தன்னிடமிருந்த இரண்டு ருபாயைக் கொடுத்துவிட்டுப் பறந்தாள்.

அவசர அவசரமாக ஆபீசுக்குள் நுழையப்போன சத்யாவை பியூன் அனுமதிக்கவில்லை.

"போம்மா!.... வேலை பார்க்கிறவங்ககூட இவ்வளவு லேட்டாய் வர்றதில்லே; நீ வேலை தேடிக்கிட்டிருப்பவே இவ்வளவு லேட்டா?.... இனிமேல் யாரையும் உள்ளே விடாதேன்னு ஆர்டர் வந்துட்டுது...." என்ருன் அவன்!

கோயில் உள்ளே, சந்நிதிக்குள் நுழைந்த மீனாட்சியம்மாளின் செவிகளிலே மெல்லென விழுந்தது சௌந்தர்ய லஹரி.

அம்பாளின் சந்நிதியில் நின்று, கண்களை மூடியவாறு பக்தி பாவம் விகசிக்க, குழைவான குரலில் பாடிக்கொண்டிருந்தாள் சத்யா.

சட்டென்று அவளை நோக்கி நகர்ந்து வந்த மீனாட்சி, தன்னை மறந்த உற்சாகத்துடன் "அடடே! அவளேதான்!.... என்று சொல்லிக்கொண்டே சத்யாவின் தோளைத் தொட்டாள்.

"அம்மா! நீங்களா?.... சௌக்கியமாயிருக்கீங்களா?" என்று ஆர்வத்துடன் விசாரித்தாள் சத்யா.

"உன் புண்ணியத்திலேதான் இப்போ உயிரோட இருக்கேம்மா! என்னை ஆஸ்பத்திரியிலே கொண்டுபோய்ச் சேர்த்திட்டு, நீ சொல்லிக்காமப் போயிட்டே.... நான் மயக்கம் தெளிஞ்சு, என் மகனுக்குப் போன் பண்ணி வரச் சொன்னேன். என்னை ஆஸ்பத்திரியிலே பார்த்த என் மகன் துடிச்சுப்போயிட்டான். அம்மான்னு அவனுக்குத் தெய்வத்துக்குமேலே; நான்தான் பாடுபட்டு உழைச்சுச் சம்பாதிச்சு, அவனைப் படிக்கவச்சு எஞ்சினியராக்கினேன் என்கிறதினாலே அவனுக்கு என்மேலே உயிர். அந்த உயிரைக் காப்பாத்திய உன்னைப் பார்க்கணும்னு ரொம்ப ஆவலாயிருக்கான். இந்த மெட்ராஸ் பட்டணத்திலே உன்னை எப்படி மறுபடி பார்க்கப் போறேனோன்னு கவலைப்பட்டு, அம்பாளை வேண்டிக்கிட்டு இருந்தேன். அம்பாள் என்னைக் கைவிடவில்லை, அம்பத்தூர் போய்க்கொண்டிருந்த எனக்கு, தற்செயலாக இந்தக் கோயிலுக்குள் நுழையணும்னு தோணிச்சு", என்று பரிவுடன் சத்யாவின் கையைப் பிடித்துக் கொண்டே மீனாட்சியம்மாள், "ஏம்மா உன் பெயர் என்ன?" என்று கேட்டாள்.

"சத்யா....."

"சத்யா! என் பெயர் மீனாட்சி. என் மகன் ரவி, அம்பத்தூர் அருணா இண்டஸ்ட்ரீஸிலே சீஃப் எஞ்ஜினியராயிருக்கான். ஏம்மா, உன் வீடு எங்கே இருக்கு?.... ஒரு நாளைக்கு அங்கே வந்து, காபி டிபன் சாப்பிட்டுட்டு உனக்குப் பாடத் தெரியுமா, சமைக்கத் தெரியுமான்னு கேட்க, ரவியைக் கூட்டிக்கிட்டு வர்றேன்" என்று அர்த்த புஷ்டியுடன் சிரித்தாள் மீனாட்சி.

திடுக்கிட்டுப் போனாள் சத்யா. "அம்மா! நாங்க ரொம்ப ஏழைகள். எங்க அப்பா ஒரு பள்ளிக்கூட வாத்தியார். கஷ்ட ஜீவனம் பண்ற பெரிய குடும்பம்".

"நான் வரதட்சிணைக்காக மகனை விற்க நினைக்கிறவள் இல்லே, சத்யா! என் மகனும் அப்படித்தான் – தனக்கு ஒரு நல்ல மனைவி வேணும்கிறதைவிட, தாய்க்கு ஒரு நல்ல மருகமள் வேணும்னு நினைக்கிறவன் அவன்."

சத்யா, நடப்பது கனவா நனவா என்று புரியாமல் திகைத்து நின்றாள்.

சில சமயங்களில் உண்மை, கற்பனையைவிட நம்ப முடியாததாகியிருக்கும் இல்லையா?

அப்போது, கோயில் மணி டாண் டாணென்று ஒலித்தது.

"பார்த்தாயா சத்யா! கோயில் மணி முழங்குது. சுப சகுனம், உன் நல்ல குணத்துக்கு வெகுமதியாகத்தான் உனக்கு ஒரு இஞ்ஜினியர் மாப்பிள்ளை கிடைச்சிருக்கான்!" என்று சிரித்தாள் மீனாட்சி அம்மாள்.

இல்லை.... இதெல்லாம் என் அப்பாவின் நிஷ்காம்ய பக்திக்கான கடாட்சம். இது, இன்னொரு குசேலரின் பக்தி அவலைச் சுவைத்த கண்ணனின் அருள் சிரிப்பு! என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள் சத்யா.

பரங்குன்ற முருகனுக்குப் பாற்குடமும் காவடியும்

(''பழம்நீ'' லெ. மு. மு. முத்துமாணிக்கம்)

ஆறுபடை வீடுகளில் புகழ்பெற்ற படைவீடாகிய பழனிமலைக்கு ஆயிரமாயிரம் காவடிகளும் பாற்குடங்களும் எடுத்துச்சென்று ஆண்டவர் தண்டாயுதபாணியை அன்பர்கள் காலாகாலமாக வழிபட்டு வருகின்றனர். அவர்களுள், தமிழ்ப்பணியும், தெய்வப்பணியும் தொடர்ந்து செய்துவருகின்ற நகரத்தார்கள் செட்டிநாட்டிலிருந்து கண்டனூர் அருளாடியார் வழிநடத்த, பாதயாத்திரையாகவும், காவடிகள் எடுத்தும் சென்ற பல நூறு ஆண்டுகளாகப் பழனியாண்டவரை வழிபட்டு வருகிறார்கள். பழனியில் உள்ள நகரத்தார்களுக்குச் சொந்தமான அன்னதானமடத்தில் 5 நாள் மகேஸ்வர பூஜைசெய்து ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மக நட்சத்திரத்தன்று காவடிகளும், பாற்குடங்களும் செலுத்தி சுவாமி தரிசனம் செய்துவருகிறார்கள்.

மதுரையில் வாழ்ந்துவரும் நகரத்தார் ''கூடற் குடவயின்'' அமைந்து ஆடல் மயில் ஏறும் அழகன் அருள்பாலிக்கும் திருப்பரங்குன்றத்திற்கு இதைப்போலக் காவடிகள், பாற்குடங்கள் எடுத்துச் செலுத்தியும், பாதயாத்திரை சென்றும் சிறப்பு வழிபாடு செய்தால் நலம் என்று கருதி 8 ஆண்டுகளுக்குமுன் இச்சிறப்பு வழிபாட்டைத் தொடங்கினர். ஆண்டுதோறும் ஆவணி மாதம் கார்த்திகையன்று இச்சிறப்பு வழிபாட்டைச் செய்துவருகின்றனர். ஆவணிக் கார்த்திகைக்கு 30 நாட்களுக்கு முன்னர் 'நகரக்காவடி' எடுப்பவரைத் திருவுளச் சீட்டு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் 1 மாதகாலம் விரதமிருந்து நகரக்காவடி எடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஆவணிக் கார்த்திகைக்கு முதல்நாள் மாலை மதுரை நகரவிடுதியில் காவடிகட்டி, பொங்கல்வைத்து, பஜனை, பூஜைசெய்து கூட்டுவழிபாடு நடத்துவர். 60 ஆண்டுகள் நிறைவடைந்த ஒருவர் விநாயகப் பானை வைப்பதையும் மற்றொருவர் வேலுக்கு அபிஷேகம் செய்வதையும் வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். 'பழம்நீ' பாதயாத்திரைக் குழுவின் அன்பர்கள் வெளியூர்களிலிருந்து வந்து பஜனையிலும் கூட்டுவழிபாட்டிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார்கள். நிகழ்ச்சியின் நிறைவில், அனைவருக்கும் தேவகோட்டை அன்பர் திரு. வெ. நா. மு. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் தமது உபயமாக விருந்தளிக்கிறார்கள்.

கார்த்திகையன்று காலை பாற்குடங்கள் கட்டி நகரவிடுதியிலிருந்து 8 மணியளவில், மேளதாளங்களுடன் வேல்காவடியும், காவடிகளும், பாற்குடங்களும் பாதயாத்திரை ஆண்களும் தாய்மார்களும் சிறுவர் சிறுமியர்களும் சூழ்ந்து நடக்க ''அரஹரோஹரா'' ''வேல் வேல்'' முழக்கத்துடன், நகரவிடுதி வாயிலில் கட்டியம், எச்சரிக்கை கூறியவுடன் புறப்பட்டு முற்பகல் 11 மணியளவில் திருப்பரங்குன்றம் சென்றடைந்து மூலவர், ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமிக்கு வழிபாடு நடைபெறும். பின்னர் அருள்மிகு சண்முகநாத சுவாமிக்கு காவடிகளும் பாற்குடங்களும் செலுத்தப்பட்டு, பால் அபிஷேகம் முதல் பல அபிஷேகங்கள் செய்து சிறப்பு வழிபாடு நடத்தப்பெறும். 600க்கு மேற்பட்ட நகரத்தார்

பெருமக்களும், பிறரும் முருகனை தரிசித்து மகிழ்வர். மதுரை நகரத்தார் சங்கத் தலைவர், துணைத்தலைவர்கள், செயலாளர்கள், அமைப்பாளர் முதலியவர்களுக்கு மாலையணிவித்து பிரசாதம் வழங்கப்பெறும்.

ஆண்டுதோறும் நகரத்தாரின் காவடிகள், பாற்குடங்கள் எண்ணிக்கையில் கூடிவருகின்றன. பாதயாத்திரை வழியில் அன்பர்கள் ரொட்டி, மிட்டாய், லட்டு, காபி வழங்கிவருகிறார்கள்.

திருக்கோயில் வழிபாடு நிறைவுற்ற பிறகு திருப்பரங்குன்றம் நகரவிடுதியில் மஹேஸ்வர பூஜை நடத்தி அன்பர்கள் எல்லோருக்கும் பகல் விருந்து நடைபெறும். வழிபாட்டுக்கு அளிக்கப்பட்ட மங்கலப் பொருள்கள் ஏலம் விடப்படும். இந்த ஏலத்தொகைகள் கூட்டுவழிபாட்டு நிதியாகச் சேர்ந்துவருகின்றன. வழிபாட்டுக்கு என நகரத்தார்கள் வழங்கும் நன்கொடையிலிருந்து வழிபாடும், பகல்விருந்தும் மதுரை நகரத்தார் சங்கத்தின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன.

மதுரை நகரத்தார் பெருமக்கள் பலரும் குடும்பத்துடன் இந்த சிறப்பு வழிபாட்டில் உற்சாகமாகக் கலந்துகொண்டு திருவருள் பெற்றுவருகிறார்கள். இப் பணியினை ஏற்று நடத்தும் பொறுப்பில் என்னை ஈடுபடுத்திய முருகனருள் கண்டு வியக்கிறேன்.



இராமேஸ்வரம் காசி பாத யாத்திரை அனுபவங்கள்

(அருள்தொண்டர், காசி ஸ்ரீ சுப இராகவன்,
தலைவர், திருத்தணி பாதயாத்திரைக் குழு)

இந்தப் புனித ஆன்மிக யாத்திரையை சிறப்புற நிறைவேற்றி வந்தவர்களில் ஒருவன் என்ற முறையில் இக்கட்டுரையை எழுதியுள்ளேன்.

கி. பி. 2-ம் நூற்றாண்டில் இளங்கோ அடிகளும், கி. பி. 7-ம் நூற்றாண்டில் சமய குரவர் நால்வரில் அப்பரும், திருஞானசம்பந்தரும், கி. பி. 9-ம் நூற்றாண்டில் சுந்தரரும், 10-ம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரும், 11-ம் நூற்றாண்டில் பட்டினத்தாரும், 12-ம் நூற்றாண்டில் சேக்கிழாரும், 13-ம் நூற்றாண்டில் அருணகிரியாரும், 17-ம் நூற்றாண்டில் பழனிப் பாதயாத்திரை அன்பர்களும், 18-ம் நூற்றாண்டில் வள்ளல் இராமலிங்க சுவாமிகளும், 19-ம் நூற்றாண்டில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் ஆன்மீக வளர்ச்சிக்காகப் பல ஸ்தலங்களுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்தும், பல பாடல்களையும், புராணங்களையும் உருவாக்கியும் நமது மதத்தை வளர்த்துவந்தார்கள். அதேபோல் 20-ம் நூற்றாண்டில் அரசியல் வாழ்வில் Great March ஆக மாசேதுங் 2000 மைல் நடந்து நவீன சைனாவை உருவாக்கினார். இந்த நூற்றாண்டில் ஆன்மீக வளர்ச்சிக்காக 2000 மைல் நாங்களும் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு நடந்து சென்றோம் என்றால் அது நமது மதத்தின் பெருமையை காட்டுகிறது அல்லவா! இந்த யாத்திரையை தொடங்க வேண்டுமென்ற எண்ணம் எப்படி உதயமாயிற்று என்பது முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா.

நம் முன்னோர்களால் சுமார் 380 வருடங்களாக நாம் பழனிக்குத் தைப்பூசத்திற்குப் பாத யாத்திரையாக சென்று முருகனை தரிசித்து வருவது நமது சமுகத்தார் எல்லோருக்கும் நன்கு தெரிந்த உண்மையே. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இராமேஸ்வரம்-காசி நடை யாத்திரைக் குழுவின் அமைப்பாளர் உயர்திரு. பொற்கிழிக் கவிஞர், காசி ஸ்ரீ. அரு. சோமசுந்தரம் அவர்களும் பழனிக்கு முதன் முறையாக பாத யாத்திரை வந்தார்கள். அதுபோதுதான் நடைக்கு ஏகுந்தாற்போல் வேகம் ஊட்டக்கூடிய பாடல்கள் தேவை என்று எண்ணி பல பாடல்கள் படைத்தார்கள். அத்துடன் நாம் ஏன் மற்ற ஐந்துபடை முருகன் ஸ்தலங்களுக்கு நடக்கக்கூடாது என்ற எண்ணத்தையும் எழுப்பியதுடனும், அந்தப்படி ஏனைய ஐந்துபடை ஸ்தலத்திற்கும் காவடிச் சாமி திரு. ஏகநாதன் அவர்கள் காவடி எடுத்துவர பல அன்பர்களையும் சேர்த்து நடந்தார்கள். ஒவ்வொரு ஸ்தலத்திலும் திருமுருகனைப் பற்றி ஒவ்வொரு பாடல்கள் அமைப்பது அவர்களது வழக்கம். 1977-ம் ஆண்டு

முதன் முறையாக திருச்செந்திலாதிபனை தரிசிக்க திருச்செந்தூர் பயணம் புறப்பட்டபொழுது "செந்திலாண்டவா – திருச்–செந்திலாண்டவா" என்ற பாடலை எழுதினார்கள். அந்தப் பாடலிலே இரண்டு வரிகள் அமைந்தன. அதாவது "காசி முதல் குமரி வரை உனது எல்லையே–கால் நடந்து வந்தவர்க்குக் கவலை இல்லையே" என்று. 1978–ம் ஆண்டு திருச்செந்தூருக்கு நடந்துபோகும் வாய்ப்பு எனக்கு ஆண்டவன் அருளினார். அது சமயம் இந்தப் பாடலை நான் படித்தேன். உடனே எனக்கு ஓர் ஐயம் உண்டாயிற்று. நம் முன்னோர்கள் பலர் காசிக்குப் பாத யாத்திரையாக சென்றதில் சிலர் திரும்பியதாகவும், பலர் திரும்பியது இல்லை என்றும் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நமது தலைமுறையில் காணவும் இல்லை. இந்தியாவில் 130 ஆண்டுகளுக்கு முன்பு திரு. டல்ஹவுசிபிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுதுதான் ரயில் பாதை அமைத்து, புகைவண்டி ஓடத்தொடங்கியது. அந்தப் பாதை அமைத்தபின் இதுவரை யாரும் நடந்து செல்லவே இல்லை. அப்படியிருக்க நம் கவிஞருக்கு எப்படி இந்த எண்ணம் உதயமாயிற்று என்ற ஐயப்பாட்டை அவர்களிடம் கேட்டேன். அன்று நாங்கள் திருச்செந்தூ––ருக்கு செல்லும் சமயம். அப்பொழுது அவர்கள் "நாம் காசிக்கு நடந்து சென்று இந்த மாபெரும் சாதனையை நிலைநாட்டுகிறோம்" என்று சொன்னார்கள். ஆம், அந்த உண்மைக் கவிஞரின் வாக்கு பொய்யாக வில்லை. 6 ஆண்டுகளாக பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரம் அவர்கள் அரும்பாடுபட்டு காசியாத்திரைக்கு வேண்டிய செயல்பாடு திட்டத்திற்கு பாடுபட்டு, 6 மாநிலங்களில் உள்ள அரசாங்கத்திடமும், ஏனைய அமைப்புகளிடையேயும் தொடர்புகொண்டு எங்களது நடை யாத்திரைக்கும் தேதி குறிப்பிட்டு, இதில் யார் யார் பங்குகொள்ள முடியும் என்று முன்பே அவர்களிடம் தெரிவித்த அன்பர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தார்கள். நாங்கள் 13 பேர்கள் இந்த யாத்திரைக்குச் செல்ல திட்டமிட்டோம். 17–2–1983 காலை 8–30 மணிக்கு இந்த யாத்திரை துவங்கும் என்று குறிப்பிட்டார்கள். பயணம் புறப்பட வேண்டிய 13 பேரும் அமைப்பாளர் அரு. சோ. வீட்டில் 14–2–83 காலையில் கூடினோம். பகல் 12–30 மணியளவில் நமக்கு எல்லாம் பழனி யாத்திரை சாமியாக இருந்து அருள்பாலிக்கும் திரு. பழனியப்பச் செட்டியார் அவர்கள் வந்து அருள்–வாக்கு நல்கி விபூதி கொடுத்து எங்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். 15–2–83 காலையில் உப்பூர் சென்று கடல் ஸ்நானம் செய்து நவக்கிரக தோஷம் கழித்து இரவு ரயில் மூலமாக இராமேஸ்வரம் சென்றடைந்தோம். அங்கு ஏராளமான அன்பர்கள் எங்களை வழி அனுப்ப வந்து சேர்ந்தது கண்கொள்ளாக் காட்சி. 16–2–83 இராமேஸ்வரத்தி––லுள்ள அத்துணைத் தீர்த்தங்களில் நீராடி காசிக்கு எங்களுடன் எடுத்துச் செல்ல கோடி தீர்த்தமும்–கடல் மண்ணையும் எடுத்து

இராமநாதஸ்வாமி - பர்வதவர்த்தினி தாயை வணங்கி எங்களது பயணத்தின் பொன்னான நேரத்தை எதிர்நோக்கியிருந்தோம். 17-2-83 அன்றுதான் எங்கள் வாழ்நாளில் ஒரு பெரிய சாதனையை நிகழ்த்த உள்ள நாள். காலைக் கதிரவன் சிவந்த மேனியைத் தலைகாட்டும் முன்பே நாங்கள் கடல் ஸ்நானம் செய்து அம்மையப்பனை வணங்கித் தயாராக இருந்தோம். நமக்கெல்லாம் சொந்த அப்பனாகிய கந்தப்பன் என்ற எண்ணத்தின்படி இராமேஸ்வரத்தின் ஆலய நிர்வாகி திரு. கந்தசாமி அவர்கள் தலைமை தாங்கி பல தமிழ் அறிஞர்கள் வாழ்த்துக்கூற 70 வயதுப் பெரியவர் சிவபாத சேகர் திரு சிதம்பரம் செட்டியார் அவர்கள் கோடி தீர்த்தக் குடத்துடன். கடல் மண்ணையும் எடுத்துக்கொண்டு சரியாக 8 30 மணிக்கு எங்களது புனிதப் பயணத்தை நாங்கள் 13 பேர்கள் ஆரம்பித்து அங்குள்ள எல்லா கோயில்களையும் தரிசித்து ஊர் எல்லைக்கு வந்ததும், எங்களை வழி அனுப்ப வந்த அன்பர்களின் கண்களில் நீர்மல்கி எங்களை வழியனுப்பி வைத்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது

இந்த யாத்திரையின் முக்கிய நோக்கம் "ஒரு நாடாய் எல்லோரும் உயர்வாகவே-ஒன்றாக பூசிந்தோம் விஸ்வேஸ்வரா" என்பதுதான். நாங்கள் நடந்துசென்ற பாதை, நெடுஞ்சாலை எண். NH 7 தூரம் 2000 மைல்கள் 116 நாட்கள் இடைவிடாமல் தினசரி நடந்தோம், தமிழ்நாடு, 28 நாட்கள் கர்நாடகம், 7 நாட்கள். ஆந்திர மாநிலத்தை 33 நாட்களும் மஹாராஷ்டிரா மாநிலத்தை 12 நாட்களும், மத்தியப் பிரதேசத்தை 26 நாட்களும், உத்திரப் பிரதேசத்தை 10 நாட்களும் ஆக மொத்தம் 116 நாட்களில் சென்றோம். நாங்கள் புறப்படுவதற்கு முன்பே (Daily Programme) தினசரி பயண நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயார்செய்து வைத்திருந்தோம் அதன்படி தினசரி காலை 3-30 மணிக்கு கடன்களை முடித்துகொண்டு சரியாக 4 மணிக்கு எங்கள் பயணத்தைத் தொடங்கு--வோம் தொடங்குமுன் எங்கள் ட்ரை சைக்கிளின்மேல் வைத்துள்ள தீர்த்தக்குடம் கடல் மண், வேல் மற்றப் படங்களுக்குத் தீப ஆராதனை செய்து பெரியவர்களிடம் விபூதி வாங்கி அணிந்துகொண்டு இராமேஸ்வரா காசி விஸ்வேஸ்வரா என்ற பாட்டைப் படித்துக்கொண்டு புறப்படுவோம். காலையில் 10 மைலிலிருந்து 12 மைல் வரை நடப்போம் பிறகு நல்ல நிழலும், நீரும் உள்ள இடம் எதுவாக இருப்பினும் தங்கி சமையல் ஆரம்பிப்போம். 1 மணியளவில் வேலுக்கு நைவேத்தியம் செய்து தீபம் பார்த்து பகல் உணவு சாப்பிடும்பொழுது அன்றைய தினம் வரிசையாக திரு அமுதுக்குப் பணம் கொடுத்தவர்களுக்கு நன்றி கூறி சாப்பிடுவோம் அவர்களுக்கும் அந்த இடத்திலிருந்து சாப்பிட்டோம் என்று நன்றிக் கடிதமும் உடனே எழுதி அனுப்பி வைப்போம். பிறகு 3-30 மணிவரை

ஓய்வெடுப்போம். அவ்வமயம் பட்டிமன்றம், வழக்காடு மன்றம், பாரதி கதைகள், நாயன்மார்கள் சரித்திரம், கவிஞரால் விளக்கம் நடைபெறும். சரியாக 4 மணிக்கு மீண்டும் எங்கள் பயணத்தைத் தொடங்கி 6 மணி-யளவில் ஏதாவது ஒரு ஊரை அனுசரித்து அங்குள்ள கோயிலிலோ, அல்லது பள்ளிக்கூடத்திலோ தங்கிவிடுவோம். தினசரி சுமார் 20-25 மைல்கள் நடப்போம். இதுதான் எங்களது பயணத்தின் சிறப்பு. தமிழகத்தைத் தாண்டி கர்நாடகம், சென்றபொழுது அங்குள்ள நம் இனத்தவர்கள் ஊர் எல்லைக்கே வந்து சிறப்பித்து அழைத்துச் சென்று அவர்கள் மாநில எல்லையை கடக்கும் நாள்வரை உணவு கொடுத்து ஆதரித்தார்கள். திருச்சி சுவாமிகளையும் சந்தித்து ஆசி பெற்றோம். அதன்பிறகு ஆந்திரா எல்லைக்குள் சென்ற முதல் நாளே எங்களுக்குப் பெரும் சோதனை ஒன்று இரவு ஒரு மணிக்கு ஏற்பட்டது. நாங்கள் அன்று இரவு அங்கு சோதனை சாவடியில் உள்ள கடை ஒன்றில் தங்கினோம். நடுநிசி பக்கத்து கடையில் தீப்பிடித்து எங்களையும் தாக்க ஆரம்பித்த நேரத்தில் நாங்கள் எல்லோரும் திருவருளின் கிருபையால் அதற்கு இரையாகாமல் தப்பினோம். ஆந்திராவில் எங்களது பயணத்தின் 42ஆம் நாள் கூத்தி என்ற ஊரில் இரவு தங்கினோம். மறுநாள் அதிக தூரம் கடக்க வேண்டிய நாள். அதனால் 2-30 மணிக்கு எங்களது காலைப் பயணத்தை துவக்கிவிட்டோம். காலை 4-30 மணிவரை நடந்தோம். ஊரே ஏதும் தென்படவில்லை. எங்களுக்கு காபி சாப்பிட்டால் தெம்பாக இருக்கும் என நினைத்து வண்டியை நிறுத்தினோம். நல்ல இருட்டு, எங்களிடத்தில் காபி பவுடர், பால்பவுடர், சர்க்கரை, தண்ணீர் எல்லாம் இருந்தது. வண்டியை நிறுத்தி மூன்று கல்லையும் எடுத்து அடுப்பாக்கி வைத்துவிட்டு விறகு தேடினோம். அது பாறுங்கற்கள் நிறைந்த இடம். டார்ச்சு லைட்டு அடிச்சுத் தேடினோம். ஒரு விறகுத் துண்டு கூடக் கிடைக்கவில்லை. விஸ்வேஸ்வரர் கிருபை விடியற்காலைவரை நடப்போம் அதன்பிறகு ஏதாவது ஊர் தென்பட்டால் அங்கு காபி சாப்பிடலாம் என்று நினைத்து எல்லாவற்றையும் திரும்ப வண்டியில் ஏற்ற முற்பட்ட பொழுது ஒரு வண்டி வந்துநின்றது. ஆம் அவன் அருளாலேயே. அதுவும் விறகு வண்டி. அவரிடம் விபரம் சொன்னோம். அவரும் எதுவும் எதிர்பாராமல் ஒரு விறகுக் கட்டு கொடுத்து உதவினார். நாங்கள் காபி தயார் செய்யும் பொருட்டு ஈடுபட்ட நேரத்தில் வண்டி புறப்பட்டது. உடனே நான் அவருக்கு அந்த உதவி செய்தவருக்கு ஒரு டம்ளர் காபி கொடுக்க வேண்டுமென்று நினைத்து வண்டியைப் பார்த்தால் ஒரு கண நேரத்திற்குள் வண்டி மறைந்த மாயமே தெரியவில்லை. எல்லாம் அவன் திருவிளையாடலே. பிறகு ஒருநாள் நாங்கள் காலையில் நடந்து சோர்ந்திருந்து நடக்கிறோம். உடம்பில் வலு குன்றிய நேரம். பழங்கள் ஏதாவது கிடைத்தால் மிக தெம்பாக இருக்கும் என கவிஞர் அவர்கள்

சொன்னார்கள். அப்பொழுது நான் இந்தக் காட்டில் நமக்கு அது கிடைக்காது. ஆனால் நாம் பழங்கள் என்று எழுதி அதை நினைத்துக் கொள்ள வேண்டியதுதான் என்றேன். அப்பொழுது எங்களுக்கு எதிர் திசையிலிருந்து வேகமாக ஒரு லாரி வருவது தென்பட்டது. எங்கள் குழாத்துக்கு அண்மையில் வரும்பொழுது வண்டியிலிருந்து நிறைய சாத்துக்குடி பழமாக விழுந்தது. எப்படியிருக்கும். நாங்கள் பழம் என்று நினைக்க விஸ்வேஸ்வரனே அந்த பழங்களை எங்களுக்கு என்று நாங்கள் இருக்கும் இடம்தேடி கொடுத்துச்சென்ற பெருமையை நினைந்து ஆனந்தக் கண்ணீர் மல்கினோம். ஆந்திரத்திலிருந்து சீதோஷ்ண நிலை மிகவும் மாறுபட ஆரம்பித்துவிட்டது. அங்குள்ள செக்கந்திராபாத், ஹைதராபாத் நகரத்தார் மிகவும் அருமையான திட்டம் நிறைவேற்றி எங்களை ஹைதராபாத் செல்வதற்கு 5 தினங்களுக்கு முன்பே சந்தித்து அன்றிலிருந்து எங்களுக்கு தங்குவதற்கும், உணவிற்கும் ஏற்பாடு செய்ததை எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது. நிர்மல்கடந்து சாத்பூரா மலை சுமார் 1800 அடி உயரம். அதை அவன் அருளால் எந்தவித சிரமமின்றி கடந்தோம். இதுவரை தமிழகத்தில் காவேரி, தென்பெண்ணை, வடபெண்ணை ஆகிய 3 நதிகளிலும், ஆந்திரத்தில் துங்கபத்திரா, கிருஷ்ணா, கோதாவரி, ஸ்வர்ணா நதி ஆகிய நான்கு நதிகளிலும், மஹாராஷ்டிரத்தில் பென்கங்கா, வார்தா, வாணா, பில்லி, கன்கான் ஆகிய ஐந்து நதிகளிலும், மத்தியப் பிரதேசத்தில் நர்மதை, வெயின்கங்கா, ஆகிய 13 நதிகளிலும், உத்திரப் பிரதேசத்தில், கங்கை, யமுனை, திரிவேணி சங்கமம் ஆகிய 17 நதிகளிலும் ஆக 38 நதிகளில் ஸ்நானம் செய்தும் எண்ணற்ற சிவ ஸ்தலங்களையும், அம்பாள் கோயிலையும், வைஷ்ணவ ஸ்தலங்களையும், தரிசித்தோம். மத்தியபிரதேசத்தில் ரீவா என்ற ஊரிலே போலீஸ் ஸ்டேஷனில் உள்ள கைதி ஒருவர் எங்களைக் கூப்பிட்டு காவல்காரருக்குத் தெரியாமல் வைத்திருந்த ரூ. 2/– எங்களுக்கு நன்கொடை கொடுத்தது எங்களுக்கெல்லாம் மெய்சிலிர்த்தது. அப்படி ஈகை தன்மை உள்ளவர்களாக இருக்கிறார்கள். மத்தியபகுதி காடுகளிலே தேக்கு மரங்களும், நிறைய மாமரங்களும் உள்ளன. குறிப்பிட்டபடி நாங்கள் 116 நாளில் காசி சென்று காசி விஸ்வேஸ்வரர், விசாலாட்சி, அன்னபூரணி, காலபைரவரை தரிசித்தோம். விஸ்வநாதர் கோயிலில் "காசிஸ்ரீ" என்ற பட்டத்தை நல்கினார்கள். பிறகு இறையருளால் இனிதே ஊர் திரும்பினோம். இப்பொழுது 1980இல் இரண்டாம் முறையாக இராமேஸ்வரம் காசி பாதயாத்திரையும் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நகரத்தார் - ஊர்கள்

	ஊர் பெயர்	பின் கோட்
1	நா. கோட்டை	— 623 556
2	கோ. அழகாபுரி	— 623 560
3	பாகனேரி	— 623 558
4	சொ. புரம்	— 623 313
5	மதகுபட்டி	— 623 553
6	அ. கோட்டை	— 623 553
7	ஒக்கூர்	— 623 557
8	கீழப்பூங்குடி	— 623 507
9	சோழபுரம்	— 623 503
10	சக்கந்தி	— 623 560
11	கா. மங்கலம்	— 623 557
12	கருங்குளம்	— 623 575
13	கா. மாணிக்கம்	— 623 204
14	அ. சிறுவயல்	— 623 305
15	வெற்றியூர்	— 623 305
16	பனங்குடி	— 623 555
17	நடராஜபுரம்	— 623 555
18	செம்பனூர்	— 623 313
19	பட்டமங்கலம்	— 623 310
	மேல வட்டகை	
20	கீழச்சிவற்பட்டி	— 623 205
21	விராமதி	— 623 212
22	பி. அழகாபுரி	— 623 205
23	நெற்குப்பை	— 623 405
24	கண்டவராயன்பட்டி	— 623 203
25	சிறுகூடல்பட்டி	— 623 215
26	பூலாங்குறிச்சி	— 623 413
27	ஆ. தெக்கூர்	— 623 201
28	ஆவினிப்பட்டி	... 623 205
29	செவ்வூர்	— 623 417
30	மகிபாலன்பட்டி	— 623 217
	கீழ வட்டகை	
31	தேவகோட்டை	— 623 302
32	ஆ. சண்முகநாதபுரம்	— 623 314
33	தாணிச்சாவூரணி	— 623 302
	கீழப்பத்தூர் வட்டகை	
34	அரிமளம்	— 622 201
35	கடியாபட்டி	— 622 505
36	இராயவரம்	— 622 506
37	தேனிபட்டி	— 622 202
	மேலபத்தூர் வட்டகை	
38	வலையபட்டி	— 622 411
39	உலகம்பட்டி	— 622 410
40	குழிபிறை	— 622 402
41	பொ. புதுப்பட்டி	— 622 408
42	நற்சாந்துபட்டி	— 622 404
43	வேந்தன்பட்டி	— 622 403
44	மேலச்சிவபுரி	— 622 403
45	வேகுபட்டி	— 622 408
46	கொப்பனாபட்டி	— 622 401
47	விராச்சிலை	— 622 412
48	ராங்கியம்	— 622 409
49	பனையப்பட்டி	— 622 406
50	கு கொ பட்டி	— 622 415
51	மிதிலைப்பட்டி	— 622 409
52	வி. லெட்சுமிபுரம்	— 622 412
	பதினுறார் வட்டகை	
53	காரைக்குடி	— 623 001
54	பள்ளத்தூர்	— 623 107
55	கண்டனூர்	— 623 104
56	புதுவயல்	— 623 108
57	கோட்டையூர்	— 623 106
58	கோ அழகாபுரி	— 623 106
59	உ. சிறுவயல்	— 623 208
60	கானாடுகாத்தான்	— 623 103
61	கொத்தமங்கலம்	— 623 105
62	கொ லெட்சுமிபுரம்	— 623 105
63	நேமத்தான்பட்டி	— 623 103
64	பலவான்குடி	— 623 208
65	அரியக்குடி	— 623 202
66	சொ. புதூர்	— 623 101
67	அமராவதிபுதூர்	— 623 301
68	கல்லல்	— 623 305
69	மானகிரி	— 623 307
70	கல்லுப்பட்டி	— 623 306
71	நாச்சியாபுரம்	— 623 207
72	சிறுவயல்	— 623 206
	நீண்டகரைப்பிரிவு	
73	கோனாபட்டு	— 6223 50
74	ஆத்தங்குடி	— 623 101
75	ஆ. முத்துப்பட்டணம்	— 623 101

மலர் மணம்பெற நல்வாழ்த்துக்கள் :

காரைக்குடி - முத்துப்பட்டணம் அருள்திரு மீனாட்சி அம்மன் ஆலயக் குடமுழுக்கு விழா நன்கு நடைபெற்று நகரத்தார் நலம் சிறக்க அருளுமாறு எல்லாம் வல்ல இறையாம் அவள் தாள் பணிந்து அவள் அருளைச் சிந்திக்கின்றோம்.



பணிவுடன்,

D. அருணாசலம் B. Sc., (Hons) M. A., M. Ted., F. M. S.
AR. லெட்சுமி
M. பாரி M. Com., C. A. I. I B.
வள்ளியம்மை பாரி M Com.,
அருணா - தேவராஜன் (B. A.,)
அருணா - வெங்கடாசலம் B. E., (M. E.,)
அருணா - மாணிக்கவாசகம் B. E.,